ஆகஸ்ட் 2002 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



துணைப் பிரதமராகும் அத்வானி : அப்பட்டமான ஆர். எஸ். எஸ். ஆட்சி



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்திய இராணுவத்தின் அட்டூழியம்

இந்திய இராணுவம் கடந்த ஜூன் மாதம் 29-ஆம் தேதி பத்திரிகைகளுக்கு அளித்த செய்தியில், "எல்லை தாண்டி வந்த மூன்று பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொன்று விட்டதாகவும், அவர்களிடமிருந்து ஏராளமான நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும்" குறிப்பிட்டிருந்தது. ஆனால், "இந்த மூன்று பேரும் இந்தியப் பகுதியின் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டிற்கு அருகேயுள்ள தேரா தாஸ்கி கிராமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர்; இவர்களை ஜூன் 25-ம் தேதி கடத்திக் கொண்டு போன இந்திய இராணுவம், அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு எல்லை தாண்டிய பயங்கரவாதிகள் என்று நாடகமாடுகிறது" என்ற உண்மைகள் தற்பொழுது அம்பலமாகியுள்ளன. இதுபோல எத்தனை உள்ளூர் காசுமீரிகளை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றிருக்கும் என்பது அத்வானிக்கே வெளிச்சம்!

## இந்து மதவெறிக்கு போலீசின் பாதுகாப்பு

மும்பய் நகரைச் சேர்ந்த இடதுசாரி அறிவுஜீவிகளும், மாணவர்களும் ஒன்றாக இணைந்து ஜூன் மாதம் 1,2 தேதிகளில் குஜராத் இனப்படுகொலை பற்றிய கருத்தரங்கமொன்றை நடத்தத் திட்டமிட்டனர். பொதுவாகவே உள் அரங்குகளில் நடைபெறும் கருத்தரங்குகளுக்கு போலீசிடம் அனுமதி பெற வேண்டியதில்லை. ஆனால், மும்பய் நகர போலீசோ கருத்தரங்கம் நடத்த அனுமதி பெற வேண்டும் என உத்தரவு போட்டது. பின் இக்கருத்தரங்கம் தொடங்குவதற்கு முதல் நாள் திடீரென இக்கருத்தரங்கத்திற்குக் கொடுத்திருந்த அனுமதியை ரத்து செய்தது. அமைப்பாளர்களின் பல்வேறு போராட்டங்களுக்குப் பின் ஜூலை 13,14 தேதிகளில் கருத்தரங்கை நடத்திக் கொள்ள போலீசு அனுமதித்தது. இக்கருத்தரங்கை எப்படியாவது தடை செய்துவிட கடைசி வரை முயன்ற போலீசு, "மதவெறியை எதிர்த்தால் மத அமைதி கெட்டுவிடும்" எனச் சாக்கு சொல்லியது. இப்படிப்பட்ட பாதுகாப்பு இந்து மதவெறியர்களுக்கு காங்கிரசு ஆளும் மாநிலத்திலும் கிடைப்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது!

## இதுதாண்டா இந்து ராஷ்டிரம்

அகமதாபாத் நகரில் கடந்த இரண்டு மாதங்களில் 18 பேர் தற்கொலை செய்து கொண்டு இறந்து போய்விட்டனர். இறந்து போனவர்களுள் பலர் 'இந்து' மதத்தைச் சேர்ந்த சிறு வியாபாரிகள். கலவரத்தின் காரணமாக இவர்களின் வியாபாரமும், தொழிலும் படுத்துப் போய், பிழைக்க வழியில்லாமல் போய்விட்டதால், இவர்கள் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகக் கூறப்படுகிறது. "பா.ஜ.க. ஆட்சி அமைந்தால்தான் இந்துக்களுக்கு பாதுகாப்பு" என மடத்தனமாக நம்பிக் கொண்டிருக்கும் மேல்சாதி நடுத்தர வர்க்கத்தின் கண்களை இத்தற்கொலை சாவுகள் திறந்துவிட்டால் சரி!

## அமெரிக்காவை எதிர்த்த பள்ளி மாணவர்கள்

தென் கொரிய தலைநகர் சியோலில் பள்ளி மாணவ - மாணவிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆர்ப்பாட்ட பேரணியொன்றை சமீபத்தில் நடத்தினர். அமெரிக்க இராணுவ கவச வண்டியில் சிக்கி இறந்து போன இரண்டு பள்ளி மாணவிகளின் சாவுக்கு நீதி கேட்டு, பள்ளி மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தினர். ஊர்வலப் பாதை நெடுகிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பாடல்களைப் பாடிச் சென்ற இம்மாணவர்கள், இப்படுகொலைக்கு ஜார்ஜ் புஷ் மன்னிப்பு கேட்க வேண்டும் என முழங்கினார்கள். அமெரிக்க இராணுவ தளத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இம்மாணவர்கள் சிவப்பு காகிதத்தில் விமானங்களைத் தயார் செய்து, அந்த இராணுவ தளத்தின் மீது வீசியெறிந்ததோடு, "அமெரிக்க இராணுவமே, தென்கொரியாவை விட்டு வெளியேறு" என முழக்கமிட்டனர்.




## உயிர் ஊசலாடும் தமிழக மனித உரிமை கமிசன்

தேசிய மனித உரிமை கமிசனும், அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநில மனித உரிமை கமிசன்களும் பல்லில்லாத அமைப்புகள் என்பது ஊரறிந்த உண்மை. ஆனாலும், பாசிச ஜெயா கும்பலால் இந்தப் பல்லில்லாத அமைப்பைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தமிழக மனித உரிமை கமிசன் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வந்தது. அதன் தலைவராக இருந்த நீதிபதி நயினார் சுந்தரம் இறந்து பத்து மாதங்களாகிவிட்டது. மூன்று உறுப்பினர்கள் ஓய்வு பெற்று போய் மூன்று மாதம் முடிந்து விட்டது. இந்த நான்கு பதவிகளும் நிரப்பப்படாததால், தமிழக மனித உரிமை கமிசன் ஒரேயொரு உறுப்பினரை மட்டும் கொண்டு இயங்க வேண்டிய இக்கட்டில் வைக்கப்பட்டுள்ளது.

## ஆன்மீகப் போர்வைக்குள் இந்து மத பயங்கரவாதிகள்

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் ஜெகந்நாத் யாத்திரை நடப்பதற்கு முதல் நாள், சர்யுதாஸ்ஜி கோவிலின் மகான் எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் சிவ்ராம்தாஸ்ஜி என்ற இந்துச் சாமியாரை அம்மாநில போலீசார் கைது செய்தனர்; அவரிடமிருந்து ஒன்பது துப்பாக்கிகளையும் கைப்பற்றினர். உடனே விசுவ இந்து பரிசத், "இந்தக் கைது முசுலீம்களைத் திருப்திபடுத்துவதற்காக நடத்தப்பட்ட சதி; மகானைக் கைது செய்த போலீசாரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய வேண்டும்" என அம்மாநில முதல்வர் மோடியைத் தூண்டிவிட்டது. துப்பாக்கியும் கையுமாக முசுலீம் பிடிபட்டால், அவன் பயங்கரவாதி; இந்து மதச் சாமியார் பிடிபட்டால் அப்பாவியா?

**குஜராத் இனப்படுகொலையைக் கண்டித்து, போலீசின் மிரட்டலை மீறி மும்பய் நகரில் நடந்த கருத்தரங்கம்.**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

**இதழ் 10**

ஆகஸ்டு 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


# பாசிச ஜெயாவின் "பொடா" பாய்ச்சல் சந்தர்ப்பவாதிகளின் வெற்றுக் கூச்சல்

விடுதலைப் புலிகளை ஆதரித்து மதுரை - திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதைக் காரணம் காட்டி, ம.தி.மு.க. நிறுவனத் தலைவர் வைகோ மற்றும் எட்டு பேர் மீது பாசிச ஜெயா கும்பல் பயங்கரவாத "பொடா" சட்டத்தை ஏவிச் சிறையிலடைத்துள்ளது. "பொடா" சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வது, தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்று நியாயம் கற்பிக்கும் ஜெயா, ம.தி.மு.க. தடை செய்யப்பட வேண்டிய இயக்கம்; அதற்கான பரிசீலனையில் உள்ளோம் என்று எச்சரித்துள்ளார். ம.தி.மு.க. மட்டுமின்றி, புலிகளுக்கு ஆதரவாகச் சவடால் அடித்து வரும் பா.ம.க. நிறுவனத் தலைவர் இராமதாசு, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலித்து வருவதாகவும் அச்சுறுத்தியுள்ளார். புலிகளின் ஈழத்துடன் தமிழ்நாட்டையும் இணைத்து அகண்ட தமிழகமாக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததால், தமிழகத்தை இரு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் என இராமதாசு கோருகிறார் என்று பிரிவினைவாத பீதியூட்டுகிறார். மீண்டும் பிரிவினைவாத - தீவிரவாத - பயங்கரவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடவும், அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடவும் பார்ப்பன பாசிச ஜெயா கும்பல் மூர்க்கமாகக் கிளம்பி விட்டது. இருண்ட காலத்தின் இரண்டாவது அத்தியாயம் பீடு நடைபோடுகிறது.

இப்"பொடா" பாய்ச்சலை துக்ளக் சோ-வும் பாசிச காங்கிரசும் ஆதரித்து நியாயப்படுத்துகின்றனர். அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு அ.தி.மு.க. அரசு இச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறது என்கிறார் "பொடா"வை ஆதரிக்கும் கருணாநிதி. வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் போலி கம்யூனிஸ்டுகளும் முலயம்சிங் யாதவும் "பொடா"வை எதிர்க்கும் அதேசமயம், வைகோவின் பொடா ஆதரவு - புலி ஆதரவு நிலையை ஆதரிக்கவில்லை. ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியோ, வெளிப்படையாக இப்"பொடா" கைதுகளைக் கண்டிக்க முன்வரவில்லை. இந்த வழக்கில் நீதிமன்றம் சொல்லும் வழிகாட்டலுக்கு ஏற்ப பொடா சட்டத்தில் தேவையான திருத்தம் செய்வோம் என்று ஒதுங்கிக் கொள்கிறது. வைகோ கைது செய்யப்பட்டிருப்பது, துரதிருஷ்டவசமானது என்று புலம்புகிறர், வைகோவின் அரசியல் கூட்டாளியும் இந்துவெறியர்களின் நம்பகமான அரசியல் தரகருமான ஜார்ஜ் பெர்னாண்டஸ். மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கு, மாநிலத்தின் அதிகாரம் - இவற்றில் மத்திய அரசு தலையிட முடியாது; இக்கைதுகள் பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு தாக்கீது அனுப்பினால் பரிசீலிப்போம் என்று நழுவிக் கொண்டு மறைமுகமாக இக்கைதுகளை ஆதரிக்கிறார், அத்வானி.

வைகோவின் கைதைக் கண்டிக்கும் பழ.நெடுமாறன், திருமாவளவன் ஆகியோர் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் அதேசமயம், பொடா சட்டத்தையும் எதிர்க்கின்றனர். பொடாவையும் ஆதரிப்போம்; புலிகளையும் ஆதரிப்போம் என்ற வைகோவின் நிலைப்பாட்டை பா.ம.க.வின் இராமதாசைத் தவிர வேறு எவரும் நியாயப்படுத்தி ஆதரிக்கத் தயாராக இல்லை. ஆளும் இந்துவெறி பாசிஸ்டுகளோ அவரது நிலைப்பாட்டை ஆதரிக்க முன்வரவில்லை. தனது சந்தர்ப்பவாத அரசியலால், இதர அரசியல் கட்சிகளிடமும் ஆதரவின்றி வைகோ தனிமைப்பட்டுப் போயுள்ளார்.

வைகோவை பயங்கரவாதியாகச் சித்தரிக்கும் முயற்சியில் தமிழக அரசு அவரைக் கைது செய்துள்ளது என்று வேதனைப்படுகிறார்கள், தமிழ்ச் சான்றோர்கள். ஒரு பயங்கரவாதியைக் கைது செய்வதுபோல விமான நிலையத்தில் சுற்றி வளைத்து வைகோவைக் கைது செய்திருக்கிறார்கள் என்று அங்கலாய்க்கிறார், திருமாவளவன்.

வைகோ என்ன மாபெரும் ஜனநாயகவாதியா? அவர், பார்ப்பன இந்துவெறி பயங்கரவாதிகளின் விசுவாசி; அவர்களின் காலை நக்கிப் பிழைக்கும் கைக்கூலி; பொடா உள்ளிட்டு அனைத்து அரசு பயங்கரவாதத்தையும் ஆதரித்து நிற்கும் தமிழினத் துரோகி. காங்கிரசு ஆட்சியிலே அசாமில் நடந்த நெல்லிப் படுகொலைகளையும், டெல்லி சீக்கியப் படுகொலைகளையும் காட்டி, குஜராத்தில் இந்துவெறியர்கள் நடத்திய பாசிச பயங்கரத்தைக் கிஞ்சித்தும் மனிதாபிமானமின்றி ஆதரித்துப் பேசிய கடைந்தெடுத்த பாசிசப் பாதந்தாங்கி; இந்துவெறி பயங்கரவாதி அத்வானியின் இதயத் துடிப்பாகச் செயல்படும் பிழைப்புவாதி; தமிழின மக்களை மரணக் குழியில் தள்ளிவரும் ஆளுங்கும்பலின் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை விசுவாசமாக ஆதரித்து நிற்கும் துரோகி!

பாசிச ஜெயாவின் ஊழல் கொள்ளைக்கு எதிராக நடைபயணம் போய்விட்டு, அவருடனேயே வெட்கமின்றி கூட்டுச் சேர்ந்தவர்தான் வைகோ. அவரது கட்சித் தொண்டர்கள் தீக்குளிக்கக் காரணமாக இருந்த கருணாநிதியுடன் கூட்டுச் சேர்ந்து தந்தை - மகன் என்று

www.padippakam.com

பாச உறவு கொண்டாடியவர். போலி கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து தனியார்மய - தாராள மயக் கொள்கைகளை எதிர்ப்ப தாகச் சவடால் அடித்துவிட்டு, இன்று அதே கொள்கைகளை ஆத ரித்து நிற்பவர். இப்படி கொள்கை - லட்சியம் எதுவுமின்றி அரசியல் அரங்கில் சந்தர்ப்பவாத ''பல்டி'' அடித்த சூரப்புலிதான் வைகோ.

பயங்கரவாத ''பொடா'' சட்டத்துக்குப் பலியான பின்னரும் கூட 'சூரப்புலி' வைகோ, பொடா சட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனாலும், வைகோ உள்ளிட்டு தமிழகத்தில் பொடாவில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யக் கோருகின்றனர், தமிழின வாதிகள். பயங்கரவாத பொடாவை ஆதரிக்கும் கைக்கூலி வைகோவை விடுதலை செய்ய வேண்டும் என்று கோர தன்மானமுள்ள தமிழருக்கு என்ன அவசியம் இருக்கிறது?

அவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற ஒரே காரணத் துக்காகவே, அவர் விடுதலை செய்யப்படவேண்டுமென்று தமி ழினவாதிகள் கோருகின்றனர். இப்படித்தான், ஈழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார் என்று இந்துவெறி பாசிசப் படையணியில் நிற்கும் இராணுவ அமைச்சர் பெர்னாண்டசையும் இவர்கள் ஆதரித்து நின்றனர். அதேபோல, ஈழத்தில் இராணுவத் தலையீடு செய்ய மாட்டோம் என்று வாஜ்பாய் அரசு அறிவித்து விட்டதால், அதற்கு செயல்தந்திர ரீதியில் ஆதரவளிக்கவும் கிளம்பினர். வைகோவைப் போலவே, தமிழினவாதி களின் சந்தர்ப்பவாதமும் கொடிகட்டிப் பறக்கிறது.

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்துவிட் டாரே என்று வைகோவின் கதியை எண்ணி ஒப்பாரி வைக்கிறார்கள் தமிழ்ச் சான்றோர்கள், வாஜ்பாய் துரோகமிழைத்து விட்டார் என்று புலம்புகிறார்கள். சேராத இடத்தில் சேருகிறோம் என்று தெரியாமல், இந்துவெறி பாசிச ஆட்சியாளர்களின் காலை விசுவாசமாக நக்கும் அளவுக்குப் போனாரே, அந்த அளவுக்கு வைகோ அர சியலில் அடிமுட்டாளா? தமிழ்ச் சான்றோர்கள் இந்தப் 'புரட்சிப் புயலு'க்கு உண்மைகளை விளக்கி உபதேசிக்காமல், அந்தப் பாசிச அணியில் இருந்தபோதும் அவரை ஆதரித்து துதிபாடினார்களே அது ஏன்? டெல்லி ஏகாதிபத்திய வாதிகள், பார்ப்பன - பனியா கூட்டத்தினர் என்றெல்லாம் மத்தியிலுள்ள ஆட்சியாளர் களை ஒருபுறம் சாடிவிட்டு, மறுபுறம் அவர் களுடன் கூட்டுச் சேர்ந்து பிழைக்கும் வைகோவை அம்பலப்படுத்தாமல் ஆத ரித்து நின்றார்களே, அது ஏன்? இது சந்தர்ப் பவாதமா அல்லது சான்றாண்மையா?

திராவிடக் கட்சிகள் மாறிமாறி டெல்லிக்கு காவடி தூக்கிக் கொண்டு சவடால் அடிப்பதையே தமது பிழைப்பு வாத உத்தியாகக் கொண்டுள்ளன. தமிழின வாதிகளோ இப்பிழைப்புவாத சவடால் பேர்வழிகளை ஆதரித்து நிற்பதையே தமது சந்தர்ப்பவாத உத்தியாகக் கொண்டுள்ளனர்: வைகோவின் கைது விவ காரம், வைகோவின் பிழைப்புவாதத்தை மட்டுமல்ல; தமிழினவாதிகளின் சந்தர்ப்ப வாதத்தையும் அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

ஓட்டுக் கட்சிகள் சித்தரிப்பதுபோல, பொடா சட்டம் என்பது எல்லை தாண்டிய பாக். பயங்கரவாதத்தை ஒடுக்க கொண்டுவ ரப்பட்டது; இச்சட்டத்தை அரசியல் பழி வாங்குவதற்காக ஜெயா தவறாகப் பயன்ப டுத்துகிறார் என்பதெல்லாம் உண்மை யல்ல, பொடா சட்டத்தைச் சரியாகவே பயன்படுத்தினாலும், அது பாசிச பயங்கர வாதச் சட்டம்தான். பயங்கரவாதப் பீதி யூட்டி மதச்சிறுபான்மையினர் மட்டுமின்றி, தேசிய இன உரிமைக்காகப் போராடுவோ ரையும் தனியார்மயம் - தாராள மயம் எனும் மறுகாலனியாதிக்கத் தையும் எதிர்த்துப் போராடும் உழைக்கும் மக்களையும் ஒடுக்கு வதற்காகவே கொண்டு வரப்பட் டுள்ள மிகக் கொடிய கருப்புச் சட்டம்தான் அது. இச்சட்டத்தை ஏவி பாசிச பயங்கரத்தை நிறுவுவ தில் இந்துவெறி ஆட்சியாளர் களும் பாசிச ஜெயா கும்பலும் ஒர ணியில் நிற்கின்றனர். ''ஐயோ! பயங்கரவாதம்!'' என்று பெருங் கூச்சல் போடுகின்றனர். மொத்தத்தில் பயங்கரவாத - தீவி ரவாத - பிரிவினைவாத பீதியூட்டி பாசிச பயங்கரத்தை நிறுவுவதே பார்ப்பன - பனியா கும்பலின் அரசியல் உத்தியாக உள்ளது.

ஏற்கனவே தமிழர் மீட்சிப் படை, தமிழ்நாடு விடுதலைப் படை ஆகிய தமிழினத் தீவிரவாத குழுக் களை பொடாவின் கீழ் தடை செய்துள்ள ஜெயா கும்பல் இப்போது பெயரளவுக்குக் கூட தமிழின உரிமை - ஈழ விடுத லைக்குக் குரல் கொடுக்கக்கூடாது என்று மூர்க்கமாக ஒடுக்கக் கிளம்பி விட்டது. வைகோ, இராம தாசு முதலான சவடால் பேர்வழிக ளின் வாயைஅடைப்பது மட்டு மல்ல; நியாயமான தமிழின உரி மைக்கான போராட்டங்களையும் அமைப்புகளையும், தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புக ளுடன் தொடர்புடையதாக முத்திரை குத்தி அடக்குமுறையை ஏவுவதும் பார்ப்பன பாசிசத்தை நிறுவுவதுமே அக்கும்பலின் நோக்கமாக உள்ளது.

இதை அறிந்திருந்த போதிலும், இந்து வெறி பாசிச ஆட்சியாளர்களின் நம்பக மான விசுவாசியாக உள்ள தைரியத்தில், தமிழின உரிமை - புலிகளுக்கு ஆதரவு என்று வீரவசனம் பேசி வெற்றுச் சவடால் அடித்து வந்தார் வைகோ. இச்சந்தர்ப்ப வாத - பிழைப்புவாதத்துக்கு இன்று அவரே பலியாகி விட்டார். ஆனால், தமிழின பிழைப்புவாதிகளின் சந்தர்ப்பவாதம், பார்ப்பன எதிர்ப்பு - இனவிடுதலை - புரட்சி - பகுத்தறிவு திராவிடம் என்ற சவ டால்களால் மூடி மறைக்கப்பட்டு வருகி றது. ஓட்டுப் பொறுக்கிகளின் சந்தர்ப்பவா தத்தைவிட இத்தகைய மூடி மறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம்தான் மிக அபாயகரமானது. இதை அம்பலப்படுத்தி முறியடிக்காமல் பார்ப்பன - பாசிச ஆட்சியாளர்களையோ, பயங்கரவாத பொடாவையோ தகர்த்தெ றிய முடியாது; நியாயமான தமிழின உரி மைக்கான போராட்டங்களையோ மறுகால னிய எதிர்ப்புப் போராட்டங்களையோ முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

●○●





''பொடா''வில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகள்.



படிப்பகம்

www.padippakam.com

# துணைப் பிரதமராக அத்வானி அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். ஆட்சி

மந்திரிசபை மாற்றம் வருகிறது; பிரச்சினைகள் தீரப் போகிறது என மோடி மஸ்தான் பாணியில் வித்தை காட்டி வந்தது மைய அரசு. மந்திரிசபை மாற்றம் கடைசியில் நடந்து விட்டது. இந்துவெறி பயங்கரவாதி அத்வானி துணைப் பிரதமராக்கப் பட்டுள்ளார். 'பிரச்சினை'யும் ஏறக்குறைய தீர்ந்து விட்டது. நடப்பது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி என்று இதுவரை நம்பச் சொன்னார்கள், இப்போது 'ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவின் ஆட்சி' தான் என்று முகத்திலறைந்தாற் போல் கூறிவிட்டார்கள். பகுத்தறிவு, திராவிடம், மதச்சார்பின்மை பேசிய கூட்டணிக் கட்சிகள் மௌன சாட்சிகளாக, நெட்டை மரங்களாக நிற்கின்றன.

வாஜ்பாய் மிதவாதி; அவர் பிரதமர் என்பதால்தான் பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைக்கிறோம் என்று இதுவரை தங்களது பிழைப்புவாத, சந்தர்ப்பவாதக் கூட்டணிக்கு வக்காலத்து வாங்கி வந்தார்கள். தற்போது இதுகூட எவ்வளவு பெரிய மோசடி என அம்பலமாகிறது.

அத்வானியை துணைப் பிரதமர் என்று அறிவித்தது பற்றி 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்கிற ஆங்கில நாளேட்டிற்கு பேட்டியளித்த அத்வானி, ''ஏற்கனவே உள்துறை அமைச்சகப் பணிக்கு வெளியே பிரதமரின் பணிகள் சிலவற்றைச் செய்து வந்தேன். தற்போதைய துணைப் பிரதமர் அறிவிப்பால், ஏற்கனவே செய்து வந்த வேலைகளையே சட்டப்படியும் உரிமையுடனும் செய்யப் போகிறேன்'' என்று கூறியுள்ளார்.

கூட்டணிக் கட்சிகளுக்கு இது தெரியாதிருக்குமா? இவ்வளவு காலமும், இப்போதும் கூட அத்வானி கூறிய பின்புதானே இது தெரிய வருகிறது? வாஜ்பாயிக்காகத்தான் கூட்டணியில் இருக்கிறோம் என்று கூறியது மோசடி தவிர வேறென்ன?

தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் மொத்த மந்திரிகள் 77 பேரில் 57 பேர் பா.ஜ.க.வினர். முக்கியமான பொறுப்புகளெல்லாம் பா.ஜ.க.வினரின் கைகளில்தான் உள்ளன. பா.ஜ.க. அல்லாத இராணுவ மந்திரி பெர்னாண்டஸ் ஆர்.எஸ்.எஸ். விசுவாசி. இதை பா.ஜ.க. ஆட்சி எனக் கூறாமல் கூட்டணி ஆட்சி என்பது பித்தலாட்டமல்லவா?

ஏற்கனவே தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிதான் நடக்கிறது எனக் கூறி வந்த காலத்திலேயே, உண்மை அதுதானா? ராமர் கோயில் கட்டுவது, பொது சிவில் சட்டம், காசுமீர் மாநிலத்திற்கான சலுகை தரும் 370 சட்ட திருத்தம் என்ற தனது இந்துவெறி திட்டத்தைக்கூட பா.ஜ.க. கைவிட்டிருந்ததா?

சம்பவங்களைச் சற்றுத் திரும்பிப் பார்த்தால், இல்லை என்பது பளிச்செனத் தெரியும். ராமர் கோயில் கட்டும் பிரச்சினை, அதற்கான முயற்சி இன்று வரை தொடர்கிறது. உ.பி. முதல்வர் ராமர் கோயில் கூட்டுத் திட்டம் பா.ஜ.க. நிகழ்ச்சி நிரலில் உள்ளது எனக் கூறியபோது கூட்டணிக் கட்சிகள் எதிர்த்த 'வேகம்', கல்தூண் பூசையின் போது முற்றாக அடங்கிப் போனது ஏன்? பிரதமரின் சிறப்புத் தூதரே கல்தூணை பெற்றுக் கொண்டதற்கு அர்த்தம் என்ன?

நாடு முழுவதும் கிறித்தவர்கள் தாக்கப்பட்டு, ஸ்டேன்ஸ் பாதிரியாரும், அவரது இரு மகன்களும் உயிரோடு கொளுத்தப்பட்டு, கிறித்துவ பெண் சாமியார்கள் மீது பாலியல் பலாத்காரம் நடத்தப்பட்ட சூழலில், ஒப்புக்குக் கண்டித்து விட்டு, 'மத மாற்றம் பற்றி நாடு தழுவிய விவாதம் நடத்தப்பட வேண்டும்' என வாஜ்பாய் திமிருடன் பேசிய போது கூட்டணிக் கட்சிகள் செயலற்றுப் போனதற்கு அர்த்தம் என்ன?

கல்விக் கொள்கையில் ஆர்.எஸ்.எஸ்.சின் பொய்யான வரலாறுகளே பள்ளி, கல்லூரிகளில் பாடத் திட்டமாக்கப்பட்ட போதும், 'வேத ஜோதிடம்' என்ற மூட நம்பிக்கை பல்கலையில் பட்டப்படிப்பாக்கப்பட்ட போதும், கூட்டணிக் கட்சிகள் ஒப்புக்கு எதிர்த்து விட்டு முடங்கி விட்டன. ஆர்.எஸ்.எஸ்.சின் பொய்யான வரலாறே பிஞ்சு மனங்களில் நஞ்சாகப் பாய்ச்சப்படும் அபாயத்தை என்னவென்பது?

இறுதியாக, குஜராத் கலவரம்! மனிதாபிமானமுள்ள எவரும் ஏற்கவியலா கொடூரத்தை அரங்கேற்றின, பா.ஜ.க.வும் அதன் பரிவாரங்களும். எதிர்க்கட்சிகள் மோடியை நீக்கு என்று மட்டுமே குரலெழுப்பின. பா.ஜ.க. ஆட்சியை அல்ல, முதல்வரை மாற்று என்றுதானே கூறுகிறோம் என்று கெஞ்சின. பாரதீய ஜனதா அசையவில்லை.

அடுத்தடுத்து பாரதீய ஜனதா தனது 'மறைமுக'த் திட்டத்தை நடைமுறைப் படுத்த, அதை எதிர்ப்பதற்குத் திராணியற்ற கூட்டணிக் கட்சிகளின் கையாலாகாத் தனத்தை மட்டுமல்ல; எதிர்க்கட்சிகளின்

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்





படிப்பகம்

www.padippakam.com

## முசுலீம் பிணங்களின் மீது தேர்தல் திருவிழா

# இந்து மதவெறி பாசிச வக்கிரம்

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் கணிப்புப்படி குஜராத்தில் அமைதி திரும்பி விட்டது. ஆனால், அகமதாபாத்திலுள்ள ராஜ்புர் அகதி முகாமில் தஞ்சமடைந்திருக்கும் ரஷீதாபென் குலாம் நபியால் தான் தனது வீட்டுக்குத் திரும்ப முடியவில்லை.

ரஷிதாபென் குலாம் நபி அகதி முகாமிலிருந்து வெளியேறி, தனது வீட்டிற்குச் சென்றுவிட பலமுறை முயன்றார். ஆனால், அவரால் உருக்குலைந்து போன தனது வீட்டிற்குள் மட்டுமல்ல, தனது வீடு உள்ள ''பரமானந்தம் சால்'' பகுதிக்குள்ளேயே நுழைய முடியவில்லை. அப்பகுதியைச் சேர்ந்த இந்து மதவெறிக் குண்டர்கள், கத்தியைக் காட்டி மிரட்டி அவரை ஒவ்வொரு முறையும் துரத்தியடித்ததால், வீட்டிற்குத் திரும்பிப் போகும் நினைப்பையே கைகழுவிவிட்டதாகக் கூறுகிறார், ரஷீதாபென்.

ரஷீதா பென்னைவிட, வஹிதா ஷேக்கின் நிலை இன்னும் பரிதாபகரமானது. அகமதாபாத்தில் கோமதிபுர் பகுதியில் உள்ள வஹிதா ஷேக்கின் வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தித் தரைமட்டமாக்கிவிட்ட இந்து மதவெறிக் கும்பல், இப்பொழுது அந்த இடத்தில் இரண்டு கோவில்களைக் கட்டி, உண்டியலை வைத்து விட்டது. இந்தச் சட்ட விரோதக் கோவில் பற்றி புகார் கொடுக்கப் போனால், ''கோவிலின் மீது கை வைத்தால் இந்துக்களின் மனது புண்படும்'' என உபதேசித்து, புகாரைப் பதிவு செய்ய மறுத்து விட்டது, போலீசு.


அகமதாபாத்தில் கடந்த மாதம் நடந்த ஜெகந்நாதர் யாத்திரைக்குச் சில நாட்கள் முன்னதாக, தரியாபுர் பகுதியைச் சேர்ந்த முசுலீம்கள் தங்களின் பாதுகாப்புக்காக, அப்பகுதியின் நுழைவாயிலில் புதிய இரும்புக் கதவுகளைப் பொருத்திக் கொண்டனர். இது, நாஜிக்களின் ஆட்சியில் ஐரோப்பாவில் யூதர்கள் தனிக் கொட்டடிகளில் வாழ்ந்ததைப் போன்ற அவலம், குஜராத் முசுலீம்களுக்கு நேர்ந்து விட்டதை எடுத்துக் காட்டுவதன் தொடக்கம். மேலும், அந்த யாத்திரைக்கு முன்பாக அகமதாபாத்தில் இருந்து 7000 முசுலீம்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வீடுவாசலை விட்டுவிட்டு மீண்டும் அகதிகளாக ஓடிவிட்டனர்.

மாவட்ட ஆட்சியாளர்களால், போலீசால் நடத்தப்படும் 'அமைதி'க் கூட்டங்கள், கிராமங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, முசுலீம் மக்களின் மீதான தாக்குதலைத் தொடங்கி வைக்கின்றன.

ராமேஷ்ரா கிராமத்தில் ஏப்ரல் 12 அன்று அமைதிக் கூட்டம் நடந்த இரவே மூன்று முசுலீம் குடிசைகள் எரிக்கப்பட்டன; மீண்டும் அமைதிக் கூட்டத்தை ஏப்ரல் 16 அன்று நடத்த ஏற்பாடுகள் நடந்தபொழுது, மீண்டும் மூன்று முசுலீம்களின் குடிசைகள் எரிக்கப்பட்டன.

பாஞ்ச்மஹால் மாவட்டத்திலுள்ள பாவாகாட் கிராமத்தின் தலைவர், ''நாங்கள் இந்தக் கிராமத்தில் முசுலீம்கள் வசிப்பதை விரும்பவில்லை; இது எங்கள் கிராமம்'' எனக் கூறிய பொழுது, போலீசு அதை 'அமைதி'யாகக் கேட்டுக் கொண்டு திரும்பியிருக்கிறது.

**அகமதாபாத்தில் இடுகாட்டில் இயங்கி வரும் ஷா-ஆலம் அகதி முகாம்.**



பாஞ்ச்மஹால் மாவட்டத்திலுள்ள ரந்திக்புர், பரோடா மாவட்டத்திலுள்ள கிசான்வாடி உள்ளிட்ட பலம்பெறு பகுதிகளில் நடந்த அமைதிக் கூட்டங்களில், ''முசுலீம்கள் இந்து மதவெறிக் குண்டர்கள் மீது கொடுத்துள்ள புகார்களைத் திரும்பப் பெறாவிடில், கிராமத்திற்குள் நுழைய முடியாது'' என மிரட்டப்பட்டுள்ளனர்.

இனப்படுகொலை உச்சத்தில் இருந்த பொழுது, மோரா கிராமத்தில் இருந்து வெளியேறிய முசுலீம் குடும்பங்கள் மீண்டும் கிராமத்திற்குத் திரும்பிவிட்டாலும், அக்கிராம முசுலீம்களுக்கு 'இந்துக்கள்' எந்தவொரு வேலையும் கொடுப்பதில்லை. திறமை வாய்ந்த முசுலீம் தையல் கலைஞர்கள், ஓட்டுநர்கள், கொத்தனார்கள் போன்ற முசுலீம் தொழிலாளர்களை, அவர்களின் பழைய 'இந்து' முதலாளிகள், தற்பொழுது வேலையில் அமர்த்திக் கொள்வதில்லை. இவையனைத்தும், ''முசுலீம்களைச் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்க வேண்டும்'' என விசுவ இந்து பரிசத் போட்ட மத வெறிக் கட்டளை வேலை செய்ய தொடங்கிவிட்டதை


படிப்பகம்

www.padippakam.com



நேபானியா கிராமத்தில் எவ்வித வசதிகளும் இன்றி வெட்ட வெளியில் இயங்கும் அகதி முகாம்.

எடுத்துக் காட்டுகின்றன.

இதுதான் குஜராத்தில் திரும்பியிருக்கும் 'அமைதி'யின் இலட்சணம். இப்படிப்பட்ட நிலையில், அகமதாபாத்திலுள்ள மூன்று பெரிய அகதி முகாம்களைத் தவிர்த்து அம்மாநிலத்திலுள்ள பிற முகாம்கள் அனைத்தையும் ஜூன் 30-க்குப் பிறகு மூடி விடவேண்டும் என அம்மாநில அரசு உத்திரவிட்டுள்ளது. பொய்யான புள்ளி விவரங்களை எடுத்துப் போட்டு, இந்த மனிதத்தன்மையற்ற உத்தரவை நியாயப்படுத்தியும் வருகிறது இந்து மதவெறிக் கும்பல்.


ஜூன் மாதம் அகமதாபாத்துக்கு வந்திருந்த அத்வானி, ''அந்நகரில் 12 முகாம்களில் 15,300 முசுலீம்கள்தான் தங்கியிருப்பதாக'' ஒரு புள்ளி விவரக் கணக்கை எடுத்துப் போட்டார். அத்வானி இந்தக் கணக்கை பத்திரிகையாளர்களிடம் கூறிய அதே நாளில், அகமதாபாத் நகரில் மட்டும், 22 முகாம்களில் 49,000 முசுலீம்கள் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

குஜராத்தில் நடந்த இன வெறிப் படுகொலை உச்சத்தில் இருந்தபொழுது, ஒன்றரை இலட்சம் முசுலீம்கள் 121 முகாம்களில் அகதிகளாகத் தங்கியிருந்தனர். குஜராத் மாநில அரசின் நிர்பந்தத்தால் பெரும்பாலான முகாம்கள் மூடப்பட்டுவிட்டதால், தற்பொழுது பத்தொன்பதே முகாம்களில் 60,000 பேர் மந்தைகளைப் போல் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில், ''அகதி முகாம்களின் அங்கீகாரத்தை ரத்து செய்வது; அகதி முகாம்களுக்கு வழங்கப்படும் அற்பமான நிவாரணத் தொகையைத் தர மறுப்பது; தண்ணீர், மின்சார இணைப்புகளை வெட்டுவது; அகதி முகாமை விட்டு வெளியேறிப் போனால், உடனே வெளியேறிய அகதிகளுக்கு நட்டஈடு வழங்கப்படும் என ஆசை காட்டுவது; அகதி முகாம்களை நடத்துபவர்களை மிரட்டுவது'' ஆகிய கீழ்த்தரமான நிர்பந்தங்களின் மூலம் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் அகதி முகாம்களையும் இழுத்து மூடிவிட்டு, 60,000 முசுலீம் அகதிகளை நடுத் தெருவுக்குத் துரத்திவிடச் சதித்திட்டம் போடுகிறது, இந்து மதவெறிக் கும்பல்.

### அகதி முகாம்களின் அவலங்கள்

மயிரிழையில் இந்து மதவெறிக் கும்பலிடமிருந்து தப்பித்து, உயிரைக் கையில்






படிப்பகம்

www.padippakam.com



**வஹிதா ஷேக் குடும்பத்தினர்: இவர்களது வீடு இருந்த இடத்தில் இப்பொழுது இரண்டு இந்து கோயில்கள் முளைத்திருக்கின்றன.**

பிடித்துக் கொண்டு ஓடிவந்த முசுலீம்களுக் காக நடத்தப்பட்ட இந்த 121 அகதி முகாம் களில், ஒன்றைக் கூட குஜராத் மாநில அரசு நடத்தவில்லை. பல்வேறு முசுலீம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும், ஜமாத்தாலும்தான் இந்த அகதி முகாம்கள் நடத்தப்பட்டன. குஜராத் மாநில அரசு இந்த அகதி முகாம்களுக்கு ஒரு கூடாரத் துணியைக் கூட வழங்கவில்லை எனும் பொழுது, வேறு என்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கும்? இந்த அகதி முகாம்களி லேயே மிகப் பெரிய, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முசுலீம்கள் தங்கியிருந்த ஷா-ஆலம் முகாம் பிணங்களை அடக்கம் செய்யும் கல்லறையில் இயங்கிய தென்றால், அகதி முகாம்களின் அவ லத்தைச் சொல்ல வேறு என்ன நிரூபணம் வேண்டும்?

பிரதமர் வாஜ்பாயி இந்த ஷா-ஆலம் அகதி முகாமை எட்டிப் பார்த்துவிட்டுப் போனதால், குஜராத் மாநில அரசு இந்த அகதி முகாமில் ஒரு இருபது கழிப்பறை களைக் கட்டிக் கொடுத்தது; தண்ணீர்த் தொட்டிகளைக் கொண்டு வந்து வைத்தது. இந்த 'அதிர்ஷ்டம்' கூட மற்ற அகதி முகாம் களுக்குக் கிடைக்கவில்லை.

அகதி முகாம்களில் சோப்பே ஆடம் பரப் பொருள் எனும்பொழுது, முகாம் களில் எந்தளவிற்குச் சுகாதாரமும், மருத் துவ வசதியும் கொடிகட்டிப் பறந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அகதி முகாமை விட்டு வெளியேறிப் போனால், இந்து மதவெறிக் குண்டர்களால் தாக்கப்படும் அபாயம் இருந்ததால், ஷா-ஆலம் அகதி முகாமில் தங்கியிருந்த முப்பது நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்க ளுக்கு, அகதி முகாமின் வெட்ட வெளி யில்தான் பிரசவம் நடந்தது. இப்பெண்க ளுக்குப் பிரசவம் பார்த்த மருத்துவச்சி பயன்படுத்திய பிரசவக் கருவிகள் துண்டு பிளேடும், அரை முழம் நூலும்தான்.

ஒரு அகதியை ஒரு நாளைக்குப் பராம ரிக்க முப்பது ரூபாய் தேவைப்படும்பொ ழுது, குஜராத் மாநில அரசு வெறும் ஏழு ரூபாயைக் கொடுத்து கைகழுவிக் கொண்டது. காசுமீரில் இருந்து ஓடிவந்த பார்ப்பன அகதிகளுக்கும், இதே ஏழு ரூபாய்தான் நிவாரண உதவி என அரசு சொல்லுமானால், அவர்கள் தில்லியை விட்டு காசுமீருக்கே திரும்ப ஓடிவிடு வார்கள். ஈழத்தமிழ் அகதிகளைவிடக் கேவலமான முறையில், மனிதத்தன்மை யற்ற விதத்தில்தான் குஜராத் முசுலீம் அக திகள் இந்து மதவெறிக் கும்பலால் நடத்தப் படுகின்றனர். அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளையோ, சுகாதார மருத் துவ வசதிகளையோ செய்துதர மறுப்பதன் மூலம், இந்து மதவெறிக் கும்பல், அகதி முகாம்களை வதை முகாம்களாகப் பயன்ப டுத்திக் கொள்கிறது.

**நிவாரண மோசடிகள்**

குஜராத்திற்கு சாவகாசமாக வந்து, ஷா-ஆலம் அகதி முகாமில் இருந்த முசு லீம்களைப் பார்த்து முதலைக் கண்ணீர் விட்ட வாஜ்பாயி, ''கொல்லப்பட்டவர் களின் குடும்பங்களுக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் நட்ட ஈடு வழங்கப்படும்; நகர்ப்பு றத்தில் வீட்டை இழந்தவர்களுக்கு ஐம்பதா யிரம் ரூபாயும், வீட்டை இழந்த கிராம மக்க ளுக்கு 15,000 ரூபாயும் வழங்கப்படும்'' என ஆரவாரமாக அறிவித்துவிட்டுப் போனார். வாஜ்பாயின் இந்தக் 'கருணை' நடைமுறைக்கு வந்தபொழுது, முசுலீம் மக்களை இரண்டாம்தர குடிமகன்களாகக் கேவலப்படுத்துவதாக அமைந்தது.

பாலாபிர் தேக்ரோ என்ற சிறு நக ரத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி அக்பர் அப்துல் அஜீஸ் ஷேக். இந்து மதவெறிக் கும்பல் இரண்டு அறைகள் கொண்ட இவ ரது வீட்டைக் கொளுத்தியதோடு, இவர் தனது இரு மகள்களை மணமுடித்துக் கொடுப்பதற்காகச் சேர்த்து வைத்திருந்த வரதட்சணை பணம் முழுவதையும் கொள்ளையடித்து விட்டுச் சென்றது. இவ ருக்கு ஏற்பட்ட இழப்பு இரண்டு லட்ச ரூபாய் எனக் கணக்கிடப்பட்டது. ஆனால், மோடி அரசு இவருக்குக் கொடுத்திருக்கும் 'உதவி'த் தொகை வெறும் மூவாயிரம் ரூபாய்.

அக்தர் மன்சூரி நடத்தி வந்த ஷீதல் ஆழ் குழாய் கிணறு நிறுவனம், இந்து மத வெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்டு, குப்பை மேடாக்கப்பட்டது. இந்தத் தாக்கு தலால் தனக்கு 45 இலட்சம் ரூபாய் நட்ட மேற்பட்டுள்ளதாகக் கணக்கிட்டுள்ள அக்தர் மன்சூரி, அதற்கான எல்லா ஆதாரங் களையும் மாவட்டத் தொழில் மையத்திடம் கொடுத்தார். இந்த ஆதாரங்களை ஏற்க மறுத்துவிட்ட அதிகாரிகள், அவருக்கு குறைந்தபட்ச நட்டஈடுகூட வழங்காமல், ஒரு இலட்ச ரூபாயைக் கடனாக்க் கொடுத்து நோகடித்தனர்.

ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமான இழப் பிற்கு ஐநூறு ரூபாய் ''உதவி''த் தொகை பெற்றுள்ள மியானா, ''நட்ட ஈடு பெறுவதற் காக அதிகாரிகளைப் போய்ப் பார்த்து வந்த பேருந்து செலவைக் கூட இந்த உதவி ஈடு செய்யாது'' என்கிறார். இந்து மதவெறிக் கும்பலால் இடிக்கப்பட்ட தனது வீட்டைத் திரும்பக் கட்டிக் கொள்வதற்காக இருநூற்று ஐம்பது ரூபாய் 'உதவி'த் தொகை பெற்றி ருக்கும் யாசின் ஷேக், ''நாங்கள் இந்த நாட்டின் குடிமகன்கள் தானா?'' எனக் குமு றுகிறார்.

பாதிக்கப்பட்ட பல முசுலீம்களுக்குப் பதினைந்து ரூபாயும், ஐம்பது ரூபாயும் 'உதவி'த் தொகையாக வழங்கி கேவலப்ப டுத்தியிருக்கிறது மோடி அரசு. இந்த அவ மானத்தையும், பாகுபாட்டையும் பொறுத்துக் கொள்ள முடியாத மோரா கிரா மத்தைச் சேர்ந்த ஃபாத்திமா பென் காசி, 'உதவி'த் தொகை காசோலையைத் திருப்பி அனுப்பி மோடி அரசின் முகத்தில் காறி உமிழ்ந்திருக்கிறார்.

இந்த அற்ப 'உதவி'த் தொகையும் கூட இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட முசு லீம்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை. ''உதவித் தொகை பெற வேண்டும் என்ப தற்காகவே பொய் சொல்கிறார்கள்; இழப்பு களை ஊதிப் பெருக்குகிறார்கள்'' என வக்கிரமாகக் குற்றஞ்சுமத்தி, பாதிக்கப்

**நீதி கேட்டுப் போராடும் சலீம்பாய்: உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட இவரது மனைவியும், மகனும் தற்பொழுது காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டனர்.**





படிப்பகம்

www.padippakam.com

பட்ட முசுலீம் மக்களை மீண்டும் மீண்டும் கேவலப் படுத்துகிறது இந்து மத வெறிக் கும்பல்.

தீக்கிரையாக்கப்பட்ட அல்லது இடித்துத் தள்ளப் பட்ட வீட்டிற்கு நட்ட ஈடு பெறுவதை விட, கொல்லப் பட்ட முசுலீம்களுக்கு நட்ட ஈடு பெறுவது குதிரைக் கொம்பான விசயம். கிடியாத் கிராமத்தைச் சேர்ந்த 67 முசுலீம் பெண்களும் குழந்தை களும் சிறுவர்களும் இந்து மதவெறிக் கும்பலால் உயி ரோடு எரித்துக் கொல்லப் பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டதற்கான எந்த 'ஆதாரத்தையும்' இறந்து போனவர்களின் உறவினர்கள் காட்டா ததால், இவர்களுக்கு நட்ட ஈடு தர முடியாது எனக் கூறி விட்டது மோடி அரசு. இந்த 67 பேரையும் உள்ளிட்டு, இப்படி ஆதாரம் காட்டமுடி யாதபடி கொல்லப்பட்ட முசுலீம்கள் அனைவரும் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டனர்.


இரண்டு வருடங்க ளுக்கு முன்பு குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் இறந்து போனவர்கள் பற்றிய ஆதாரம் காட்ட முடி யாவிட்டாலும் கூட, நட்ட ஈடு வழங்குவதற்கு வசதி யாக விதிகள் தளர்த்தப்பட் டன. இனப்படுகொலையால் தந்தையை, தாயை, மகனை, மகளை, சகோதரனை, கணவனை இழந்த முசுலீம்களுக்கு அப்படி பட்ட சலுகையை வழங்க மறுத்துவிட்டது மோடி அரசு. அப்படியே கொல்லப்பட் டவர் பற்றிய ஆதாரங்களைத் தந்தாலும் கூட, நட்டஈடை முழுமையாக வழங் காமல், இழுத்தடித்து, பாதிக்கப்பட்ட முசு லீம்களை ஏமாற்றுகிறது.

***

அகதி முகாம்களில் தங்கியுள்ள 60,000-க்கு மேற்பட்ட முசுலீம்கள், தங்களின் சொந்த வீட்டிற்கு / கிராமத் திற்குத் திரும்ப முடியவில்லை. பாதிக்கப் பட்ட முசுலீம்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. முசுலீம் இனப்படு கொலையை நடத்திய இந்து மதவெறி பாசிஸ்டுகள் கைது செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில், "அகமதா பாத்தில் ஜெகந்நாதர் யாத்திரை 'அமைதி'யாக நடந்து முடிந்திருப்பது; பெரும்பாலான அகதி முகாம்கள் மூடப்பட்டிருப் பது; நரேந்திர மோடியின் ஆலோசகராக அமர்த்தப் பட்ட கே.பி.எஸ். கில் தானாகவே பதவி விலகி யது" - இவற்றையெல்லாம் காட்டி குஜராத்தில் அமைதி திரும்பிவிட்டதாகப் பிரச சாரம் செய்கிறது இந்து மத வெறி கும்பல்.

ஆனால், குஜராத்தில் திரும்பியிருக்கும் இந்த 'அமைதி' அடுத்து என்ன நடக்குமோ என்ற பீதியில் உருவான அமைதி. குஜராத் முசுலீம்கள் மீது விட்டு விட்டு திடீர்த் தாக்குதல்கள் நடத்துவதன் மூலமும், முசு லீம்கள் பாகிஸ்தான் துணை யோடு மீண்டும் தாக்கு வார்கள் என இந்துக்க ளிடம் பொய் பிரச்சாரம் நடத்துவதன் மூலமும் இந்தப் பீதி தணிந்துவி டாமல் பாதுகாக்கிறது இந்து மதவெறிக் கும்பல். மேலும், குஜராத்தில் முசு லீம்களுக்கும், இந்துக்க ளுக்கும் இடையே ஏற்பட் டுள்ள பிளவை, வெறுப்பை, நம்பிக்கையின் மையைப் பயன்படுத்திக் கொண்டு, மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடும் திட்டத்தோடு சட்டசபை யும் கலைத்துவிட்டது.

குஜராத்தில் முசுலீம் மக்களுக்கு எதிராக இந்து மதவெறிக் கும்பல் பின்னி



இந்து மதவெறியர்களின் தாக்குதலில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள தரியார்புர் பகுதி நுழைவாயிலில் இரும்புக் கதவை அமைக்கும் முசுலீம்கள்.

எரித்துத் தரைமட்டமாக்கப்பட்ட வீட்டிற்கு ஐநூறு ரூபாய் 'உதவி'த் தொகை கொடுத்து அவமானப்படுத்தப்பட்ட நசீம்பாய் மியானா.





படிப்பகம்

www.padippakam.com

யுள்ள இந்தச் சதியை எதிர்த்து மதச்சார்பற்ற ஓட்டுக்கட்சிகள் ஒரு சின்ன துண்டறிக் கையை வெளியிட்டதாகக் கூடத் தெரிய வில்லை. குஜராத்தில் தேர்தல் நெருங்கு வதால், காங்கிரசு, ''பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்'' வெற்றிக் கனியை எப்படி பறிப்பது என்ற கவலையில் மூழ்கிப் போய்விட்டது. இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட இடது சாரிக் கூட்டணி, நிவாரணத் தொகை திரட்டி, முசுலீம் அகதிகளுக்குக் கொடுத்த தையே பெரும் சாதனையாகப் பேசிக் கொண்டு திரிகிறார்கள்.

''குஜராத்தில் சதித்தனமான முறையில், ஒரு மோசடித் தேர்தலை நடத்தி மீண்டும் அதிகாரத்தைப் பிடிக்கத் திட்டம் போடுகி றது இந்து மதவெறிக் கும்பல். அதனால் இந்தத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்'' என்ற அரசியல் முழக்கத்தை முன் வைத்து மக்களை அணிதிரட்டிப் போராட வக்கற்ற இடது, வலது போலிகள், குஜராத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சியை அறிவித்துவிட்டுப் பின் தேர்தல் நடத்த வேண்டும் என்ற யோசனையை முன் வைத்து, இந்து மதவெறியர்களுக்கு வால் பிடிக்கிறார்கள். மைய அரசு ஆர்.எஸ்.எஸ்.இன் பிடியில் இருக்கும்பொழுது, குடியரசுத் தலைவரின் ஆட்சி என்பதே ஆர்.எஸ்.எஸ்.இன் ஆட்சிதான் என்பதை இப்போலி கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதமாக மூடிமறைக்கிறார்கள்.

● செல்வம்

# கோத்ரா ரயில் எரிப்பை நடத்தியது யார்? தடய அறிவியல் விசாரணையில் கசியும் உண்மைகள்

இந்து மதவெறிக் கும்பல் குஜராத்தில் முசுலீம் இனப்படு கொலையை நடத்துவதற்கு சாக்காக அமைந்த கோத்ரா ரயில் நிலையத்தில் நடந்த ரயில் எரிப்பு சம்பவத்தைத் துப்பு துலக்கிய குஜராத் மாநில தடய அறிவியல் துறை, ''சபர்மதி விரைவு வண்டியின் ரயில் பெட்டி (எஸ்-6) மீது வெளியில் இருந்து எரி பொருளை விசிறியடித்து எரித்திருக்க சாத்தியமேயில்லை. மாறாக, அந்தப் பெட்டிக்குள் எரிபொருள் கொட்டப்பட்டுத் தீக்கி ரையாக்கப்பட்டுள்ளது'' என்று கண்டுபிடித்துள்ளது.

''ரயில் பெட்டியின் சன்னல்கள் தரையில் இருந்து கிட்டதட்ட ஏழு அடி உயரத்தில் உள்ளன. இந்த சன்னல்களின் வழியாக எரி பொருள் விசிறியடிக்கப்பட்டிருக்கும் என வைத்துக் கொண்டால், ஒரு பத்து சதவீத எரிபொருள்தான் பெட்டிக்குள் கொட்டியி ருக்கும். மீதி அனைத்தும் பெட்டியின் வெளிப்புறம்தான் சிந்தியி ருக்கும். ரயில் பெட்டி தீப்பற்றி எரிந்த பொழுது, பெட்டியின் வெளிப்புற அடிப்பாகமும், தண்டவாளமும் எரிந்திருக்கும். ஆனால், அந்த ரயில் பெட்டியின் வெளிப்புற அடிபாகத்தில் தீப்பி டிக்கவேயில்லை. இந்தத் தடயத்தை வைத்தும்; ரயில் பெட்டியின் உள்ளே நெருப்பு பரவிய விதத்தை வைத்தும் பார்க்கும் பொழுது, ரயில் பெட்டி வெளியில் இருந்து எரிக்கப்படவில்லை. மாறாக, உள்ளேயிருந்து எரிக்கப்பட்டுள்ளது. எஸ்-6 பெட்டியின் 72 எண் இருக்கையின் அருகே இருந்து யாரோ சிலர் 60 லிட்டர் எரிபொ ருளைக் கொட்டிவிட்டு, பின்னர் தீ வைத்துவிட்டுத் தப்பியிருக்கக் கூடும்'' எனத் தடய அறிவியல் துறை குறிப்பிட்டுள்ளது.

''ரயில் பெட்டி மீது கற்களை வீசியெறிந்த முசுலீம் கும்பலைச் சேர்ந்த ஒரு சிலர் ரயில் பெட்டிகளை இணைக்கும் பாதை வழியாக எஸ்-6 பெட்டிக்குள் நுழைந்து, பெட்ரோலைக் கொட்டி தீ வைத்து விட்டார்கள்'' என்கிறது இந்து மதவெறிக் கும்பல். ஆனால், போலீ சிடம் வாக்குமூலம் கொடுத்த எந்தவொரு பயணியும், பெட்டிக்குள் வெளியாட்கள் நுழைந்ததாகக் குறிப்பிடவில்லை. மேலும், எஸ்-6 பெட்டியிலும், அதற்கு அடுத்த பெட்டியிலும் பயணம் செய்த கரசேவர்களுள் சிலர், பத்திரிகைகளுக்கு அளித் துள்ள நேர்காணலில், ''எஸ்-6 பெட்டியின் மீது தாக்குதல் நடத் திய கும்பலைச் சேர்ந்தவர்களுள் யாரும் பெட்டிக்குள் நுழைய வாய்ப்பில்லை'' எனக் கூறியிருக்கின்றனர்.

அதே சமயம், ஆர்.எஸ்.எஸ்.இல் வெகுகாலம் இருந்துவிட்டு தற்பொழுது காங்கிரசில் ஐக்கியமாகியிருக்கும் சங்கர்சிங் வகேலா, ''விசுவ இந்து பரிசத் தனது சுய இலாபத்திற்காகக்கூட, ரயில் பெட்டிக்குத் தீ வைத்திருக்கலாம்'' எனக் குறிப்பிடுகிறார். குஜராத் மாநில காங்கிரசு கட்சியின் முன்னாள் தலைவர் அமர்சிங் சௌத்ரி, ''ரயில் பெட்டியை எரிக்கப் பயன்படுத்தப்பட்ட எரிபொருளும், முசுலீம்களை எரித்துக் கொல்லுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எரி பொருளும் ஒன்றுதான்'' எனச் சுட்டிக் காட்டியிருக்கிறார். எனவே, கோத்ரா சம்பவம் பற்றிய உண்மையைக் கண்டறிய உச்சநீதி மன்ற விசாரணை தேவை என எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

''எஸ்-6 பெட்டிக்குள் நுழைந்து தீ வைத்தது யார்?'' என்பது இன்னும் விடுவிக்கப்படாத புதிராக இருந்தாலும், தடய அறி வியல் துறையின் அறிக்கை, ''கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தின் பின்னே பாகிஸ்தானின் சதி இருக்கிறது'' என்று இந்து மதவெறிக் கும்பல் புளுகி பீதியூட்டி வந்ததைக் குப்பைக் கூடைக்கு அனுப் பிவிட்டது.

''கோத்ராவில் ரயில் பெட்டிக்குத் தீ வைத்தது யார்?'' என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அப்பெட்டி மீது கற்களை வீசியெறிந்த முசுலீம்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தி வழக்கை நடத்தி வரும் மோடி அரசு, அகமதாபாத்தில் நரோடா பாட்டியா பகுதியில் 100 முசுலீம்களை எரித்துக் கொன்ற இந்து மத வெறிக் கும்பலுக்குத் தலைமை தாங்கிய பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் மாயாபென் கோத்னானி, விசுவ இந்து பரிசத் செய லாளர் ஜயதீப் படேல் ஆகியோர் மீது கை வைக்கவேயில்லை.

கே.பி.எஸ்.கில் குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியின் ஆலோசகராகப் பதவியேற்றவுடன், இனி எல்லாம் சட்டப்படி நியா யமாக நடைபெறும் என 'தேசிய'ப் பத்திரிகைகள் படம் காட்டின. ஆனால், நடந்தது என்ன?

பரோடா மாவட்டத்திலுள்ள மகர்புரா கிராமத்தில் மூன்று முசு லீம்களை எரித்துக் கொன்ற இந்து மதவெறியர்களின் மீது வழக்கு பதிவு செய்ய போலீசு மறுத்துவிட்டது.

அகமதாபாத்தில் மட்டும் 60,000 முசுலீம்களின் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன; இடித்துத் தரைமட்டமாக்கப்பட் டன. 440 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், போலீசு இதுவரை 936 வழக்குகளைத்தான் பதிவு செய்தி ருக்கிறது.

இப்படி பதிவாகாத வழக்குகள் ஏராளம். பதிவான வழக்கு களில், இந்து மதவெறியர்களைத் தப்புவிக்கும் நோக்கத்தோடு, குற்றப்பத்திரிக்கை தப்பும் தவறுமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வழக்கையும் தனித்தனியாகப் பதிவு செய்யாமல், ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவில் நடந்த அனைத்துக் குற்றங்களையும் ஒன்றாகப் பதிவு செய்து, ''கும்பல் வன்முறை'' என இந்து மதவெறியர்களை அடையாளம் காட்டாமல் வழக்கு களைத் தயாரிக்கிறது போலீசு. போலீசின் இந்தக் ''கதம்ப'' குற்ற பத்திரிகைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் குஜராத் உயர் நீதிமன்றம் போலீசிற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ளது.

கோத்ரா ரயில் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட முசுலீம்களில், இன்னும் போலீசிடம் சரண் அடையாதவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய மோடி அரசு உத்தரவிட்டுள்ளது. அதேசமயம், லுனாவாடா பகுதியில் முசு லீம்களின் கடைகளை எரித்ததற்காகக் கைது செய்யப்பட்ட இந்து மதவெறியர்கள், இரண்டே நாட்களில் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். இதுதான் ஆர்.எஸ்.எஸ். உருவாக்கத் துடிக்கும் இந்து ராஷ்டிரத்தின் நீதி!



படிப்பகம்

www.padippakam.com

# போபால் விஷவாயுப் படுகொலை:
# கொலைகாரனுக்குக் கவசமாக இந்திய ஆட்சியாளர்கள்

போபால் விச வாயு படுகொலையை இந்திய நாட்டு மக்களால் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. தொழில் விபத்து எனப் பூசி மெழுகப்படும் இந்தப் படுகொலையின்பொழுது, ஒரே நாள் இரவில், ஒரு சில மணிநேரத்திற்குள், பல ஆயிரக்கணக்கான மக்கள் மூச்சுத் திணறி செத்துப் போனார்கள். தப்பிப் பிழைத்தவர்களோ புற்று நோய் போன்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்டும், உடல் ஊனமுற்றும் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படுகொலை நடந்து ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நட்ட ஈடும், முறையான மருத்துவ வசதியும் வழங்கப்படவில்லை. படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளுள் ஒருவரும் தண்டிக்கப்படவில்லை. இதுவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரும் அநீதி. இந்த நிலையில், அமெரிக்க அடிவருடியான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, போபால் விசவாயு வழக்கு முழுவதையும் நீர்த்துப் போகச் செய்யும் சதியில் இறங்கியிருக்கிறது.

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவராக இருந்த லாரன் ஆன்டர்சனும், அந்நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகளும் "போபாலில் இயங்கி வந்த யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் பாதுகாப்பு அம்சங்கள் குறைபாடு உடையதாக இருந்ததையும், இதனால் வாயு கசிவு ஏற்பட்டால் பலரின் உயிரைக் காவு கொண்டு விடும் என்பதையும் அறிந்திருந்தனர்.

இதற்கான ஆதாரங்களைத் திரட்டிய மைய புலனாய்வுத் துறை யூனியன் கார்பைடு நிறுவனம், இப்படுகொலை நடந்தபொழுது அதன் தலைவராக இருந்த ஆன்டர்சன், அந்நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகள், அதிகாரிகள் உள்ளிட்டு 12 பேர் மீது, "தெரிந்தே மனிதர்களின் அகால மரணத்திற்குக் காரணமாக இருப்பவர்களை"த் தண்டிக்கும் இந்தியத் தண்டனைச் சட்டம் "304 - பிரிவு எண் 2"-ன் கீழ் 1987 ஆம் ஆண்டு வழக்குத் தொடுத்தது. இச்சட்டத்தின் கீழ் இக்குற்றவாளிகளுக்குப் பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனையும் அபாராதமும் விதிக்க முடியும்.

இவ்வழக்கை ஏற்றுக் கொண்ட போபால் நகர முதன்மைக் குற்றவியல் நடுவர் மன்றம், 1992-ஆம் ஆண்டு ஆன்டர்சனுக்கு எதிராகப் பிணையில் வெளிவர முடியாத கைது ஆணையைப் பிறப்பித்ததோடு, ஆன்டர்சனை அமெரிக்காவில் இருந்து பிடித்துவர வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்தப் பிடிவாரண்ட் உத்தரவாகி கடந்த பத்தாண்டுகளில், எத்தனையோ இந்திய தலைவர்களும், அதிகாரிகளும் எத்தனையோ முறை அமெரிக்காவிற்குப் போய்விட்டு வந்திருக்கிறார்கள். அதே போல அமெரிக்க தலைவர்களும், அதிகாரிகளும் இந்தியாவிற்கு வந்து சென்றிருக்கிறார்கள். ஆனாலும், ஒருமுறை கூட இந்தியா ஆன்டர்சனை ஒப்படையுங்கள் என அமெரிக்காவிடம் கோரவில்லை.

"பாகிஸ்தானில் தஞ்சமடைந்திருக்கும் இருபது முசுலீம் தீவிரவாதிகளைத் தன்னிடம் ஒப்படைக்க, பாகிஸ்தானை அமெரிக்கா நிர்பந்திக்க வேண்டும்" என மூச்சுக்கு முன்னூறு தடவை அமெரிக்காவிடம் கோரிக்கை வைக்கும் வாஜ்பாயிக்கும், அத்வானிக்கும் ஆன்டர்சன் விவகாரம் மட்டும் மறந்து போய் விடுகிறது.


இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தம் இருந்தும், ஆன்டர்சனை ஒப்படைக்க இந்திய அரசு கோர மறக்கிறது என்றால், அந்த ஒப்பந்தம் நாக்கு வழிப்பதற்கா என்று தெரியவில்லை.

இதனிடையே போபால் விச வாயு கிரிமினல் வழக்கில் மூக்கை நுழைத்த உச்சநீதி மன்றம், "யூனியன் கார்பைடு நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகளுக்குத் தெரிந்தே போபால் விசவாயு விபத்து நடந்ததாகக் கூற முடியாது; இது தொடர்பாக மைய புலனாய்வுத் துறை தந்துள்ளவை அனைத்தும் அனுமானங்களே தவிர, ஆதாரங்கள் இல்லை" எனக் கூறி இந்தியத் தரகு முதலாளி கேசுப் மஹிந்திரா உள்ளிட்ட 9 இந்தியர்களின் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் "304 - பிரிவு எண்: 2"-ன் கீழ் மைய புலனாய்வுத் துறை தொடுத்திருந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது; அதேசமயம், இந்த 9 பேரின் மீது இந்திய தண்டனைச் சட்டம் "304- பிரிவு ஏ"-ன் கீழ் வழக்கு நடத்த உத்தரவிட்டது. உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் தொடுத்த வழக்கையும் உச்சநீதி மன்றம் தடாலடியாகத் தள்ளுபடி செய்தது.

இந்தக் குற்றவாளிகள் "304 ஏ"-ன் கீழ் தண்டிக்கப்பட்டால், அந்த தண்டனையும் உயர்நீதி மன்றத்தாலும், உச்சநீதி மன்றத்தாலும் தள்ளுபடி செய்யப்படாமல் உறுதி செய்யப்பட்டால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய தண்டனை வெறும் இரண்டு ஆண்டுகள்தான். நாலாயிரம் பேரைக் கொன்ற, பல ஆயிரம் பேரை முடமாக்கிய, நடைபிணமாக்கிய குற்றவாளிகளுக்குத் தண்டனை வெறும் இரண்டு ஆண்டுகள் என்றால், இந்தத் தண்டனையும் எப்போது கிடைக்கும் எனக் கூற முடியாது என்றால், இதன் பெயர் நீதியா? மோசடியா?

ஒன்பது இந்தியக் குற்றவாளிகளின் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்துவிட்ட உச்சநீதி மன்றம், அமெரிக்கக் குடிமகனும், யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ஆன்டர்சனுக்கு இந்தச் சலுகையை வழங்கவில்லை. இதற்கு உச்சநீதி மன்றத்தின்

**போபால் விஷவாயு படுகொலை குற்றவாளி ஆன்டர்சனைத் தப்புவிக்க உதவும் அத்வானியைக் கண்டித்து தில்லியில் நடந்த ஆர்ப்பாட்டம்.**






படிப்பகம்

www.padippakam.com

நல்லெண்ணம் எதுவும் காரணமல்ல. மாறாக, ஆன்டர்சன் தனது இந்தியக் கூட்டாளிகளைப் போல, மையப் புலனாய்வுத் துறை தொடுத்திருந்த வழக்கை எதிர்த்து தன் பேரில் மனு செய்யவில்லை.

ஆன்டர்சனுக்காக அந்தத் திருப்பணியை இந்து மதவெறிக் கூட்டணி அரசு செய்யத் தொடங்கிவிட்டது. ''யூனியன் கார்பைடு நிறுவனம், ஹாங்காங் நகரில் உள்ள அதன் கிளை நிறுவனம் மற்றும் ஆன்டர்சன் உள்ளிட்ட மூன்று வெளிநாட்டுக் குற்றவாளிகளின் மீது மையப் புலனாய்வுத் துறை இந்திய தண்டனைச் சட்டம் '304 - பிரிவு எண் 2'-ன் கீழ் தொடுத்த வழக்கை, உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்ப '304 பிரிவு ஏ'-ன் கீழ் மாற்ற வேண்டும்'' என்ற மனுவை அத்வானியின் கீழ் இயங்கும் மைய புலனாய்வுத் துறை போபால் நகர முதன்மை நீதிபதியிடம் கொடுத்துவிட்டது.

''உலக வர்த்தகக் கட்டிடம் தகர்க்கப்பட்ட பின் உலகமே மாறிவிட்டது; மேலும், ஆன்டர்சன் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் கடுமையைக் குறைத்தால்தான், அவரை இந்தியாவிற்குப் பிடித்து வர முடியும்'' என இந்தச் சமரசத்திற்கு சாக்கு போக்கு சொல்லுகிறது இந்து மதவெறிக் கும்பல்.

உலகில் உள்ள 'பயங்கரவாதிகளை' எல்லாம் ஈவு இரக்கமற்ற விதத்தில் தண்டிக்க வேண்டும் என்பதுதான் செப். 11-க்குப் பிறகு இவர்கள் எடுத்துள்ள சபதம். ஆன்டர்சன் கூட பயங்கரவாதிதான். இட்லர் விசவாயுவைச் செலுத்தி யூதர்களைக் கொன்றதைப் போல, ஆன்டர்சன் விச வாயுவைக் கசிய விட்டு நாலாயிரம் போபால் நகரத்து மக்களைக் கொன்றிருக்கிறான்.

ராஜீவ் காந்தி என்ற தனி மனிதன் கொல்லப்பட்ட வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள பிரபாகரனுக்குக் காட்டப்படாத சலுகை, போபால் விச வாயு படுகொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஆன்டர்சனுக்கு மட்டும் காட்டப்படுவது ஏன்? பிரபாகரனை பிடித்து வர வேண்டும் என தேசபக்தக் கூச்சல் போடும் ஜெயா, இந்து நாளிதழ் போன்ற 'தேசிய'வாதிகள், ஆன்டர்சன் விசயத்தில் அடக்கி வாசிப்பது ஏன்?

இந்த 'தேச' பக்தர்கள் அனைவரும் அமெரிக்க அடிவருடிகள் என்பது தவிர, இதற்கு வேறு காரணம் எதுவும் கிடையாது. ஆன்டர்சன் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்ய முயலுவதன் மூலம், இந்த அமெரிக்க அடிவருடிக் கும்பல், இந்திய மக்களின் சுயமரியாதைக்குச் சவால் விட்டுள்ளது. எந்தவொரு பன்னாட்டு நிறுவனமும் இந்திய மக்களைச் சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனப் பச்சைக் கொடி காட்டியிருக்கிறது. ●

# மக்களைக் கொள்ளையடிக்கும் பயங்கரவாத மருத்துவர்களைத் தண்டிப்போம்!

## — வி.வி.மு.வின் கண்டன ஆர்ப்பாட்டம்

மனித உயிர்களைக் காப்பாற்றும் மருத்துவம் ஈடு இணையற்ற சேவையாகவும், மருத்துவர்களே தெய்வமாகவும் இருந்ததெல்லாம் இப்போது பழங்கதை. இன்றோ, மருத்துவத் தொழிலே மனித உயிர்களைப் பகடைக் காய்களாய் வைத்தாடும் சூதாட்டமாக மாறிவிட்டது.

உழைக்கும் மக்கள் உடம்புக்குப் பிரச்சனையென்றால் போகுமிடம் 'தர்மாஸ்பத்திரி'. அதாவது அரசு மருத்துவமனை. அங்கே எதுவுமே தர்மத்துக்குக் கிடைப்பதில்லையென்று அங்கு போனவர்களுக்குத்தான் தெரியும். நுழைவுச் சீட்டு வாங்குவதில் தொடங்கி மருத்துவர், மாத்திரை கொடுப்பவர், கடைநிலை ஊழியர் வரை காசு கொடுத்தால்தான் வேலை நடக்கும். மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கான அத்தியாவசிய மருந்துகள்கூட இருப்பின்றி நோயாளி வெளியில்தான் வாங்க வேண்டியுள்ளது. இதற்கு மேல் அரசு மருத்துவமனையின் சுகாதாரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

ஒரு மருத்துவரை உருவாக்க ஐந்தாண்டுகளுக்கு ரூ. 4 லட்சம் வரை மக்களின் வரிப்பணத்திலிருந்து மானியமாக செலவு செய்கின்றது அரசு. அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவருக்கோ மாதம் ரூபாய் பத்தாயிரத்துக்குக் குறையாமல் சம்பளமாய்த் தரப்படுகிறது.

ஆனால், உழைக்கும் மக்களைச் சுரண்டி சேர்த்து பெரும்பாலான அரசு மருத்துவர்கள் தனியாக மருத்துவமனை (க்ளினிக்) வைத்துக் கொள்கின்றனர். அரசு மருத்துவமனையில் இரண்டு மணி நேரம் வேலை செய்தால் இருபத்தியிரண்டு மணி நேரமும் சொந்த மருத்துவமனையில்தான் இருக்கின்றனர். இதனால் தனது மருத்துவமனையை ஐந்து நட்சத்திர விடுதி போல் ஆடம்பரமாகவும், சகல வசதிகளுடனும் பராமரிக்கின்றனர்.

இதையெல்லாம் பார்த்துவிட்டு தனியார் மருத்துவத்தை நாடிவரும் நோயாளியின் பாடு நாய்க்குப் பயந்து பேய்க்கு வாழ்க்கைப்பட்ட கதைதான்.

நோயாளிக்கு நம்பிக்கையூட்டி அவரைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக, அவரைப் பயமுறுத்தி, இல்லாத நோயை இருப்பதாகக் கூறி, தன்னிடமுள்ள இரத்த சோதனை, சிறுநீர்ச் சோதனை, எக்ஸ்-ரே, ஸ்கேன் என எல்லா சோதனைகளையும் செய்யச் சொல்லிப் பணம் பறிக்கின்றனர்.

நோயைக் குணப்படுத்த தேவையான மருந்தை மட்டும் தருவதில்லை. மாறாக, தன்னிடமுள்ள மருந்துகளை விற்பனை செய்யும் வியாபார புத்தியோடுதான் மருந்து சீட்டே எழுதுகின்றனர். இதில் சொந்த மருந்து கடை அல்லது அக்கம் பக்கமுள்ள மருந்து கடைகளுடன் கூட்டுச் சேர்ந்து மருந்தின் விலையைப் பலமடங்கு ஏற்றுவதன் மூலம் அடிக்கும் கொள்ளை வேறு. பயனற்ற விலை போகாத மருந்துகள் பாமர மக்களின் தலைமீது கட்டப்படுவதும் தினசரி நிகழ்வுதான்.

சாதாரண மக்கள் கையில் காசில்லாததால் எந்த நோய் வந்தாலும் தனியார் மருத்துவமனைக்கு எளிதில் போவதில்லை. அதேநேரம், அரசியல்வாதிகளோ அரசு அதிகாரிகளோ சளிக்கும் இருமலுக்கும் கூடத் தவறியும் அரசு மருத்துவமனைக்கு வருவதில்லை. மாறாக, அவரவர் தகுதி, வசதிக்கேற்ப அப்பல்லோவிற்கோ அமெரிக்காவிற்கோ சென்று மருத்துவம் பார்த்துக் கொள்கின்றனர்.

மை[illegible]ரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின்படி எல்லாத் துறைகளையும் போலவே மருத்துவத்தையும் தனியார் கைக்கு மாற்றும் நடவடிக்கை தொடங்கி விட்டதன் விளைவுதான் இப்பகல் கொள்ளைகள். மருத்துவம் படிப்பதற்கே பல லட்சம் ரூபாய் செலவு செய்வதால் அதை மீண்டும் மக்களிடம் சுமத்திக் கொள்ளையடிப்பது மருத்துவர்களால் பொதுவாக நியாயப்படுத்தப்படுகிறது. அரசு மானியம், அரசு வேலை என்றிருக்கும்போதே நிலைமை இதுதான். உலக வங்கி உத்தரவுபடி இனி கல்வி, மருத்துவம் முதலான எந்த சேவையையும் அரசு ஏற்று நடத்தாது, தனியார் மருத்துவம்தான் ஒரே கதியென்றால் என்ன நேருமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அதனாலேயே திட்டமிட்டு அரசு மருத்துவமனைகள் பராமரிப்பின்றிப் புறக்கணிக்கப்படுவதும் தனியார் மருத்துவமனைகளின் கொள்ளை அனுமதிக்கப்படுவதும் நடைபெற்று வருகிறது. அதோடு புதிய மருந்து கொள்கை என்ற பெயரில் இந்தியா முதலான ஏழை நாடுகள் பன்னாட்டு நிறுவனங்களால் சூறையாடப்படுகின்றன.

இந்நிலையில் ''மக்களைக் கொள்ளையடிக்கும் பயங்கரவாத மருத்துவர்களைத் தண்டிப்போம்'' என்ற முழக்கத்தின் கீழ் தருமபுரி, ஒசூர், திருப்பத்தூர் பகுதிகளில் விவசாயிகள் விடுதலை முன்னணி தொடர் பிரச்சார இயக்கம் மேற்கொண்டது. அரசு மருத்துவர்கள் தனியாக மருத்துவமனை



படிப்பகம்

www.padippakam.com

வைப்பதைத் தடைவிதிக்கவும், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு குறைந்தபட்ச கட்டணம் நிர்ணயம் செய்யவும் கோரியதோடு, தனியார் மருத்துவக் கொள்ளையர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், பயங்கரவாத மருத்துவர்களை வீதியில் இறங்கித் தண்டிக்கவும் உழைக்கும் மக்களை அணிதிரட்டின.

மிதிவண்டி பிரச்சாரம், பேருந்து, கடை, வீடுவீடாக பிரச்சாரம், ஆலை வாயில்களில், கல்லூரி வாயில்களில் பிரச்சாரம், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் ஏன் போலீசு நிலையம் வரை எதையும் விட்டு வைக்காமல் தொடர் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. பிரச்சாரத்தில் அனைத்து தரப்பு மக்களிடமும் ஒரு பொதுக்கருத்தை உருவாக்கியதோடு, மருத்துவர்கள் பலரும் கூட இவ்வியக்கத்தை ஆதரித்தனர். சிலர் தங்களைப் பொறுத்த வரை நேர்மையாக இருப்பதாகவும் மற்றவர்கள்தான் கொள்ளையடிக்கின்றனர் என்று தன்னிலை விளக்கமளித்தனர்.




பயங்கரவாத மருத்துவர்களைத் தண்டிக்கக் கோரி ஒசூரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

இப்பிரச்சாரத்தின் உச்சகட்டமாக ஜூலை ஒன்றாம் தேதி மிதிவண்டி ஊர்வலம் - மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குத் திட்டமிடப்பட்டது. போலீசு ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்ததால் தருமபுரி, ஓசூர், திருப்பத்தூர் நகரங்களில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பிரச்சாரம், ஆர்ப்பாட்டங்களுக்கு உழைக்கும் மக்களும், தனியார் மருத்துவமனைகளால் பாதிப்புற்றவர்களும், பல நேர்மையான மருத்துவர்களும் பல வகைகளில் ஆதரவளித்து ஊக்கப்படுத்தினர்.

தனியார் மருத்துவர்களின் கொள்ளை தனியான ஒரு சமூக பிரச்சினையல்ல. மாறாக தனியார்மயம், தாராளமயம், உலகமய நடவடிக்கையின் ஓர் அங்கம். நாட்டை மறுகாலனியாக்கி வரும் துரோக ஆட்சியாளர்களையும், பன்னாட்டு நிறுவனங்களையும் எதிர்த்துப் போராடாமல் இப்பிரச்சினையை ஒழிக்க முடியாது.

பல்வேறு ஓட்டுக் கட்சிகளும், மக்களிடம் பாராமுகமாக நடந்து கொள்ளும் நிலையில், பெரும்பான்மை மக்களின் உணர்வுகளைக் குமுறலைப் பிரதிபலிக்கும் முகமாக நடைபெற்றதால், இப்பிரச்சார இயக்கம் அனைத்து தரப்பினரிடமும் பெரும் ஆதரவை பெற்றது. நம்பிக்கையோடு போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல வி.வி.மு. திட்டமிட்டு வருகிறது.

**செய்தி:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**தருமபுரி - வேலூர் மாவட்டங்கள்.**

# கல்வியுரிமை பறிப்பு!
## - பு.மா.இ.மு.வின் கண்டன ஆர்ப்பாட்டம்

**தமிழக அரசு அண்மையில், பல்கலைக்கழகத்துடன் 67 அரசுக் கல்லூரிகளை இணைப்பது என முடிவெடுத்துள்ளது. உலக வங்கி உத்தரவுப்படி கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தைக் குறைத்து, கல்லூரிகள் கல்விக் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளவும் பாசிச ஜெயா கும்பல் தாராள அனுமதி வழங்கியுள்ளது. இதுவும் போதாதென்று மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வியில் கிராமப்புற மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த இடஒதுக்கீட்டு சலுகையையும் உயர் நீதிமன்றம் பறித்து விட்டது. இவையனைத்தும் கிராமப்புற ஏழை - தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி பெறும் உரிமையைப் பறிப்பதோடு, கல்வி நிலையங்களை வியாபாரக் கூடங்களாக்குவதை மேலும் தீவிரப் படுத்தவே செய்யும்.**

**அன்று ''சூத்திரன் படிக்கக் கூடாது'' என்றது மனுதர்மச் சட்டம். இன்று ''காசில்லாதவனுக்கு கல்வி கிடையாது'' என்கிறது புதிய வகையிலான மனுதர்மக் கொள்கை. தமிழக அரசின் இம்முடிவினால், ஏழை - எளிய மாணவர்களின் உயர்கல்வி பெறும் உரிமை பறிக்கப்படுவதுடன், இட ஒதுக்கீடும் நடைமுறைப்படுத்தப்படாமல் முடக்கப்படும். கல்லூரிகளில் கட்டாய நன்கொடை வசூல் வேட்டை கேள்விமுறையின்றித் தீவிரமாகும். ஆசிரியர் - அலுவலர்களுக்கு ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பணிப்பலன்கள் முறையாக வழங்கப்பட மாட்டாது.**

**இலட்சக்கணக்கான மாணவர்களின் கல்வி, வேலை பெறும் உரிமையைப் பறித்து, அவர்களின் எதிர்கால வாழ்வை இருளில் தள்ளும் தமிழக அரசின் இம்முடிவை எதிர்த்து, ''அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்காதே! கல்வி மற்றும் தேர்வுக் கட்டணங்களை உயர்த்தாதே! கல்வி மானியத்தைக் குறைக்காதே! உலக வங்கி உத்தரவுக்கு அடிபணியாதே!'' என்ற மைய முழக்கங்களுடன் பு.மா.இ.மு.வின் தஞ்சைக் கிளை 3.7.02 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தஞ்சை ரயில் நிலையம் அருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளாக மாணவர்களும் இளைஞர்களும் பெற்றோர்களும் பங்கேற்றனர். கல்லூரி ஆசிரியர்களும், அரசு அலுவலர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தியும், தனியார்மய - தாராளமயக் கொள்கையால் விளையும் பேரபாயத்தை விளக்கியும் உரையாற்றினர்.**



**தகவல்:**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,**
**தஞ்சை கிளை.**



படிப்பகம்

www.padippakam.com

### “கிரிமினல்கள் வேட்பாளராகலாம்!”

# இந்து வெறியர்கள் தொடங்கி ‘இடதுசாரிகள்’ வரை ஒரே கொள்கை

சமீபத்தில் தேர்தல் ஆணையம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதன்படி இனி தேர்தலில் நிற்க மனு செய்பவர்கள், மனு செய்யும் போதே தம்மீதுள்ள எல்லா கிரிமினல் வழக்குகள் பற்றிய விவரங்களையும், தமது மற்றும் குடும்பத்தினரின் சொத்து - கடன் பற்றிய விவரங்களையும், தமது கல்வித் தகுதி பற்றிய விவரங்களையும் சேர்த்தே மனு செய்ய வேண்டும். இந்த விவரங்கள் அனைவருக்கும் பகிரங்கமாக அறிவிக்கப்படும். அதில் உண்மைக்கு மாறாகவோ, பொய்யாகவோ விவரங்கள் இருந்தால் மனு தள்ளுபடி செய்யப்படும்.

இந்த உத்தரவின்படி, தேர்தலில் கிரிமினல்கள் நிற்பது தடை செய்யப்படும் என தேர்தல் ஆணையம் நம்புகிறது. நம்மையும் நம்பச் சொல்கிறது. ஆனால் நமது 'மாண்புமிகு' மக்கள் பிரதிநிதிகளோ, வேறு கோணத்தில் சிந்திக்கிறார்கள்.

அனைத்துக் கட்சியினரும் துணைப் பிரதமர் அத்வானி தலைமையில் டில்லியில் கூடினர். 'சட்டமியற்றும் உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மட்டுமே உண்டு. நீதிமன்றமோ தேர்தல் ஆணையமோ அதில் தலையிட அனுமதிக்க மாட்டோம்' என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். நமது வலது, இடது போலி கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா கட்சியினருமே தேர்தல் ஆணைய உத்தரவை ஏற்க முடியாது என திட்டவட்டமாக அறிவித்து விட்டனர். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை!

சி.பி.எம். கட்சி தேர்தல் ஆணைய உத்தரவுப்படி, மக்களுக்குப் போராடும் தமது கட்சி மீது எண்ணற்ற அரசியல் வழக்குகள் கிரிமினல் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த எல்லா வழக்குகள் பற்றியும் தேர்தலுக்கு மனு செய்யும் போதே நினைவுபடுத்தி எழுதிவிட முடியாது எனவும் (அடடா... சிபிஎம் கட்சிக்குத்தான் மக்கள் மீது எவ்வளவு அக்கறை? இந்தியாவிலேயே கொட்டடிக் கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலம் மே.வங்கம். இங்கு ஓட்டுக் கட்சிகள், கிரிமினல்கள் கூட்டு உச்சத்திலிருக்கிறது) தேர்தல் மனுவைப் பரிசீலிக்கும் அதிகாரிகள் இதைத் தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயகக் கடமையைச் செய்ய விடாமல் தேர்தலில் நிற்க விடாது தடுத்து விடுவார்கள் எனக் கூறி இந்த உத்தரவை ஏற்க மறுக்கிறது.

அதேநேரம் எல்லாக் கட்சிகளுமே கிரிமினல்கள் தேர்தலில் நிற்பதைத் தடுப்பதற்கு தாங்களே ஒரு சட்டமியற்றப் போவதாகக் கூறி, அவசர அவசரமாக ஒரு சட்ட முன் வரைவைத் தீட்டியுள்ளனர். இந்த மழைக்கால மக்களவைக் கூட்டத் தொடரிலேயே, உடனே சட்டமாக்கிவிட முடிவும் செய்து விட்டனர்.

இந்த சட்ட முன் வரைவு, தேர்தல் ஆணைய உத்தரவை முற்றாக நிராகரிக்கிறது. இரண்டு கிரிமினல் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலே அவர் தேர்தலில் நிற்க தடை என சட்டம் வகுத்துள்ளனர். கொலை, கொள்ளை போன்றவையே கொடிய கிரிமினல் குற்றம் என அதையும் வரையறுத்து விட்டனர். லஞ்ச, ஊழல், மோசடி எல்லாம் கர்ணனின் கவச குண்டலங்கள் போல, உடன் பிறந்தவை என முடிவு செய்து விட்டார்கள் போலும். இவையெல்லாம் கிரிமினல் குற்றம் என்ற பட்டியலில் இல்லை.

மேலும் தேர்தலில் நிற்கும்போதே சொத்து விவரங்கள் முழுவதையும் தர வேண்டியதில்லை. மாறாக, தேர்தலில் வென்றபின், அவர் சபாநாயகரிடம் தமது மற்றும் குடும்பத்தினரின் சொத்து விவரங்களைத் தந்தால் போதும் என திருத்தியுள்ளனர். கல்வித் தகுதி பற்றி கூற வேண்டியதில்லை என தடாலடியாக மறுத்து விட்டனர்.

கிரிமினல்களைத் தேர்தலில் நிறுத்துவோம்; என்ன செய்ய முடியும் என சவால் விட்டுள்ளனர் ஓட்டுக் கட்சியினர். தேர்தல் ஆணையமோ இதுபற்றி இப்போது கருத்துக் கூற முடியாது என மறுத்து விட்டது. தேர்தல் ஆணையம் கிரிமினல்களே கட்சித் தலைவர்களாக, மந்திரிகளாக இருப்பது பற்றியும் கூடதான் மௌனம் சாதிக்கிறது. அது போகட்டும்.

பிரச்சினை இதுதான். இந்த நாடாளுமன்ற ஆட்சிமுறை புழுத்து நாறிப் போய்விட்டது. இதன்மீது மக்களுக்குத் துளியும் நம்பிக்கையில்லை என்பதுதான் உண்மை. குறைந்த பட்சமே பதிவாகிற ஓட்டுக்களில் கூட பாதிக்கும் மேற்பட்டவை கள்ள ஓட்டுக்கள் தான். இதில் யாருக்கேனும் சந்தேகமிருந்தால் சமீபத்திய சைதாப்பேட்டை இடைத்தேர்தல் பற்றி பத்திரிக்கையில் வந்த செய்திகளைப் படியுங்கள்.

1993 வரை, ''கிரிமினல்களா? எங்கள் கட்சியிலா? இல்லவே இல்லை!'' என்றுதான் எல்லாக் கட்சிகளும் சாதித்தன. காங்கிரசு கட்சி சுசீல் சர்மாவின் தந்தூரி அடுப்புக் கொலைக்குப் பின், காங்கிரசின் கிரிமினல் தலைவர்கள் விவரம் அம்பலமாகி நாறத் தொடங்கியது. எதிர்க் கட்சிகள் மட்டும் யோக்கியமா என்பதை அம்பலப்படுத்த வோரா கமிட்டியை நியமித்து கட்சிகள், கிரிமினல்கள் கூட்டு பற்றிய அறிக்கை தயாரிக்க உத்தரவிட்டார் நரசிம்மராவ்.

வோரா அறிக்கையோ, கிரிமினல்களுடனான கூட்டு மட்டுமின்றி, கிரிமினல்களே கட்சித் தலைவர்களாக மந்திரிகளாக உலா வருவதை அம்பலமாக்கியது. அந்த அறிக்கை வெளியான பின் எந்தக் கட்சியில்தான் கிரிமினல்கள் இல்லை என எல்லாக் கட்சிகளும் கூடிப் பேசி, வோரா அறிக்கையை இருட்டடிப்புச் செய்து, கிடப்பில் போட்டன.

நாடு முழுவதும் இருக்கின்ற 4120 எம்.எல்.ஏ.க்களில் 658 பேர் மீது கொலை,

பல்வேறு கொலை - கொள்ளை வழக்குகளில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள பப்பு யாதவ், பீகார் அரசியலில் முக்கிய புள்ளி.





படிப்பகம்

www.padippakam.com

கொள்ளை, கற்பழிப்பு என கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. தற்போதுள்ள எம்.பி.க்களில் 15 பேர் மீது இதே போல கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி போன்றவர்கள் இப்பட்டியிலில் சேர்க்கப்படவில்லை.

அதாவது சொந்த நலனுக்கு, சமூக விரோதச் செயல்களில் இறங்கி, அதனால் பதிவு செய்யப்பட்ட கிரிமினல் வழக்குகள் மட்டுமே இது. மாறாக இந்துமதவெறி பாசிஸ்டுகளான பாரதீய ஜனதா கட்சி போன்றவர்கள் மீதான கலவர வழக்குகள் என்றால் இப்போதுள்ள பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவருமே முற்றிலும் கிரிமினல் - மாஃபியா கும்பல் கள்தான்.

சமீபத்தில் குஜராத் முசுலீம்கள் நரவேட்டையாடலை முன்னின்று நடத்தியவர்கள் மந்திரிகளும், எம்.எல்.ஏ.க்களும் என்று பல பத்திரிகைகள் ஆதாரத்துடன் செய்திகள் வெளியிட்டுள்ளன. அவர்கள் மீது எந்த ஒரு வழக்கும் பதிவாகவில்லை என்பதால் கிரிமினல் இல்லையா? தற்போது நாடாளுமன்ற சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவசேனாவின் மனோகர் ஜோஷி, மும்பய் கலவரத்தை முன்னின்று நடத்திய கிரிமினல் என ஸ்ரீகிருஷ்ணா கமிசன் குற்றம் சாட்டியிருப்பது தெரியாமலா எதிர்க்கட்சிகள் அனைவரும் இக்கிரிமினலைப் போட்டியின்றித் தேர்ந்தெடுத்தனர்?

எல்லாக் கட்சிகளுமே கிரிமினல்களைக் கொண்டுள்ளன. தேர்தலில் வேட்பாளராக நிறுத்தி வெற்றியும் பெறுகின்றன. தேர்தலில் நிற்க இது ஒரு சிறப்புத் தகுதியுமாக உள்ளது என்பது அசைக்க முடியாத உண்மை.

இவ்வளவு பட்டவர்த்தனமாக கிரிமினல்களை மந்திரிகளாக்கக் கூடாது; அதில் சீர்திருத்தம் வேண்டுமென்கின்றனர் சிலர். ஓட்டுக் கட்சிகளோ அதெப்படி முடியும் எனப் பாய்கின்றனர்.

கிரிமினல்கள் தேர்தலில் நிற்க தடை கோரிய வழக்கில், தேர்தலில் நிற்பவரைப் பற்றிய விவரங்கள் ஓட்டுப் போடும் வாக்காளருக்குத் தெரிவது அவரது உரிமை என்று முடிவு செய்த உச்சநீதி மன்றம் இது பற்றி தேர்தல் ஆணையத்திற்கு இவ்வாண்டு மே 2-ல் உத்தரவிட்டது. ஜூலை 2-ம் தேதிக்குள் சட்டமியற்றும்படி தேர்தல் ஆணையம் மத்திய அரசுக்குத் தெரிவித்தும் கூட, மத்திய அரசு சட்டம் இயற்றாததாலேயே, தேர்தல் ஆணையம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. நாட்டை மறுகாலனியாக்கும் தேசத் துரோகம் தவிர்த்த எந்த ஒரு பிரச்சினையிலும் ஒன்று படாத ஓட்டுக் கட்சிகள், தேர்தல் ஆணைய உத்தரவை நிராகரிப்பதில் ஒன்றுபட்டுள்ளனர்.



**பேட்டை ரவுடிகள், சாராய வியாபாரிகள், சாதி சங்கத் தலைவர்கள் எனப் பல்வேறு பின்னணியில் இருந்து இந்த கிரிமினல் அரசியல் பேர்வழிகள் உருவாகி வருகின்றனர். ஒழுக்கக் கேட்டையே ஒழுக்க நெறியாகக் கொண்ட பிழைப்புவாதமே இவர்களது சித்தாந்த அடிப்படை.**

நல்லது. அழுகி நாறும் இந்த கேடு கெட்ட நாடாளுமன்ற பன்றித் தொழுவத்தைப் புனிதப்படுத்துவதை விட, ஒட்டு மொத்தமாகத் தூக்கியெறிந்து, உண்மையிலேயே மக்களுக்கு அதிகாரமளிக்கும் மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்பதே சரியானதாயிருக்கும். அங்குதான் எல்லா அதிகார மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்க, தவறு செய்தால் திருப்பியழைக்க, தண்டிக்க மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரமிருக்கும். இது மட்டுமே உண்மையான மக்களுக்கான ஜனநாயகமாயிருக்கும்.

மாறாக, ஜனநாயக விரோதமான இந்த போலியான நாடாளுமன்ற ஆட்சி முறையைச் சீர்திருத்த என்னதான் சட்டமியற்றினாலும் இதைப் புனிதப்படுத்திவிட முடியாது.

● பாவெல்

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

கையாலாகாத்தனத்தையும் பா.ஜ.க. நன்றாகவே புரிந்து கொண்டது.

எனவேதான் மும்பய்க் கலவரத்தை நடத்திய சிவசேனாக்காரன் மனோகர் ஜோஷியை சபாநாயகராக்கியது. அப்துல் கலாம் என்ற ஆர்.எஸ்.எஸ். விசுவாசியை ஜனாதிபதியாக்கி, எதிர்க்கட்சிகளையே முடக்கியது. இப்போது ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகனையே உதவி ஜனாதிபதியாக்க களத்தில் நிற்க வைத்துள்ளது.

பா.ஜ.க. இந்து மதவெறி பாசிசத்தை அடிப்படையாகக் கொண்டு, திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறது. குஜராத்தில் நடத்தப்பட்ட இந்து வெறியாட்டம் அதற்கான ஒத்திகை. இங்கு தேர்தலில் தனித்து நின்று வெற்றி பெற்றுவிட்டால், நாடு முழுதும் குஜராத் பாணி வெறியாட்டங்களை அரங்கேற்றி, தனித்தே மத்தியிலும் ஆட்சியைப் பிடிக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தத் தொடங்கி விடும். இந்த நோக்கத்துடனேயே, இந்துவெறி பயங்கரவாதி அத்வானி துணைப் பிரதமராக்கப்பட்டுள்ளார். கடைந்தெடுத்த இந்துவெறியர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே முகமூடி வாஜ்பாயியை முன்னிறுத்தி தமது நோக்கங்களை ஈடேற்றி வந்த இந்துவெறியர்கள், இப்போது முகமூடிகளைக் கழற்றிவிட்டு வெளிப்படையாகவே அதிகாரத்தில் அமர்ந்துள்ளதையே இந்த அமைச்சரவை மாற்றம் காட்டுகிறது. அத்வானியை அச்சாணியாகக் கொண்ட இந்து வெறி பாசிசத் தேரோட்டம் தொடங்கி விட்டதற்கான அபாய அறிவிப்புதான் இது!

இந்துவெறியர்களின் காலை நக்கிக் கிடக்கும் இழிபிறவிகளாக திராவிடக் கட்சிகளும் கூட்டணி கட்சிகளும்; பலவீனமாகவும் சந்தர்ப்பவாதிகளாகவும் உள்ள எதிர்த்தரப்பு; தனியார்மய - தாராளமயத்தை உறுதியாக ஆதரிப்பதோடு, இந்துத்துவ வகுப்புவாதக் கொள்கையின் மறைமுக ஆதரவாளனாகவும் செயல்பட்டு வரும் காங்கிரசு; ஆண்டிகள் கூடி கட்டிய மடங்களாக போலி கம்யூனிஸ்டுகளின் மதச் சார்பற்ற கூட்டணியும் மக்கள் முன்னணியும்; — இவையனைத்தையும் சாதகமாக்கிக் கொண்டு பற்றிப் படர்ந்து வருகிறது, இந்துவெறி பாசிசம்.

இந்நிலையில், ஓட்டுக் கட்சி அரசியலுக்கு உள்ளேயே ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்கி, இந்துவெறி பாசிசத்தை வீழ்த்த முயற்சிப்பது பகற்கனவாகவே முடியும். ஓட்டுக் கட்சி அரசியலுக்கு வெளியே, புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் தலைமையில் மக்களை அணிதிரட்டி வீதியில் இறங்கிப் போராடுவதன் மூலமே படர்ந்துவரும் பாசிச அபாயத்தை முறியடிக்க முடியும்.

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com



## முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு?

மேற்கு வங்கத்தில் தனியார் மற்றும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் 545 திட்டங்களில் ரூ. 20,000 கோடி அளவுக்கு முதலீடு செய்ய முன் வந்துள்ளன; இதில் கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 2,000 கோடி முதலீடு கிடைத்துள்ளது என்று மே.வங்க 'இடதுசாரி' அரசின் தொழிற்துறை அமைச்சரான நிருபம் சென் கடந்த ஜூன் இறுதியில் மதுரைக்கு வந்தபோது பெருமையுடன் பேட்டியளித்தார். இதன் மூலம் மே. வங்கத்தை பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்குத் தாங்கள் தாரை வார்த்து விட்டதை வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளார்.

''உங்களது மார்க்சிஸ்ட் கட்சி தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறதே!'' என்றால், ''இன்றைய சூழ்நிலையில் தனக்குத் தானே தனிப்பொருளாதாரக் கொள்கையை நாங்கள் வகுத்துக் கொள்ள முடியாது. நாட்டுடன் ஒத்துப் போக வேண்டிய நிலை உள்ளது'' என்று சித்தாந்த விளக்கம் அளிக்கிறார் நிருபம் சென். அதாவது, கட்சித் தீர்மானம் வெறும் ஏட்டுச்சுரைக்காய்! அது காதில் பூ வைத்துக் கொண்டிருப்பவர்களுக்காகச் சொல்லப்பட்டதுதான் என்று சொல்லாமல் சொல்கிறார் சென்.

இன்னமும் உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் அதைப் போக்கும் வகையில், ''உலகமயம் - தாராளமயத்துக்கு ஏற்ப மே.வங்கத்தில் தற்போது தொழில் துறையில் முதலீட்டுச் சூழ்நிலை முழுமையாக மாறியுள்ளது. நாங்கள் பன்னாட்டு - தனியார் முதலீடுகளை மிகுந்த அளவில் வரவேற்கிறோம். பன்னாட்டு - தனியார் முதலீடுகளை நாங்கள் வரவேற்காவிட்டால் அம்முதலீடுகள் வேறு மாநிலங்களுக்குப் போய் விடும். இத்தகைய போட்டிச் சூழ்நிலையில் நாங்கள் ஒதுங்கி நிற்க முடியாது. மாநிலத்தின் நலனை முன்னிட்டு சூழ்நிலைக்கேற்ப சற்றே வளைந்து கொடுப்பதில் தவறு இல்லை'' என்று தமது கட்சியின் - அரசின் துரோகத்தனத்துக்கு நியாயம் கற்பிக்கிறார்.

தனியார்மய - தாராளமயமாக்கலைத் தீவிரமாக்கி தமிழகத்தை இந்தியாவின் முதல்தர மாநிலமாக்குவேன் என்கிறார், ஜெயா. மாநிலத்தின் நலனை முன்னிட்டு பன்னாட்டு - தனியார் முதலீடுகளை வரவேற்பதில் தவறில்லை என்கின்றனர் 'மார்க்சிஸ்டுகள்'. இப்போலி கம்யூனிஸ்டுகளுக்கும் ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் வேறுபாடு எதுவுமின்றி அம்பலமாகி முழுக்க நனைந்துவிட்ட பிறகு, இத்துரோகிகளுக்கு இன்னும் எதற்கு கம்யூனிச முக்காடு? இன்னும் எதற்கு செங்கொடி?

## நக்சல்பாரி வேட்டை...: ஆந்திராவுக்குப் போட்டியாக மே. வங்கம்

நள்ளிரவுக் கைதுகள், சித்திரவதை, அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் என 'நக்சலைட் வேட்டை' கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இது ஏதோ ஆந்திராவிலோ, பீகாரிலோ வழக்கமாகத் தொடரும் அடக்குமுறை அல்ல. தம்மை 'இடதுசாரிகள்' என்று கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில்தான் அண்மைக் காலமாக இத்தகைய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 4-ஆம் தேதியன்று கொல்கத்தா பல்கலைக்கழக அறிவியல் கல்லூரியின் விரிவுரையாளரான கௌசிக் கங்குலி, நள்ளிரவில் மே. வங்கப் போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டார். ஏறத்தாழ இரு நாட்களுக்குக் கொட்டடியில் அடைத்து வதைத்த பின்னரே போலீசார் அவரை வழக்கு மன்றத்துக்குக் கொண்டு வந்தனர். அவரது வலது காலும் இடது கையும் 'இடதுசாரி' போலீசாரின் மிருகத்தனமான சித்திரவதையில் ரணமாகியிருந்தது. போலீசார் தம்மைத் தடியால் அடித்ததோடு, பழுத்த இரும்புக் கம்பியால் தமது காலில் சூடு போட்டனர் என்று அவர் வழக்கு மன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார். அவர் மீது குற்றவியல் வழக்கு எதுவும் பதிவு செய்யாத போலீசார், நக்சல்பாரிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகப் பசப்புகின்றனர்.



நக்சல்வேட்டை என்ற பெயரால் மே.வங்க 'இடதுசாரி' அரசின் போலீசாரால் கொடூரமாக வதைக்கப்பட்ட அபிஜித் சின்ஹா.

ஜூலை 5-ம் தேதியன்று அபிஜித் சின்ஹா என்ற சுங்கத்துறை அதிகாரியின் வீட்டை நள்ளிரவில் முற்றுகையிட்ட போலீசார், அவரைக் கைது செய்துள்ளதாகக் கூறி இழுத்துச் சென்றனர். இவரது மாமனார் ஒரு டி.எஸ்.பி. ஆவார். கைது ஆணை இல்லாமல் இப்படி ஒருவரை இழுத்துச் செல்வது முறையல்ல என்று அவரது குடும்பத்தினர் வாதிட்டனர். வழக்கறிஞர் துணையுடன், எப்போதும் போலீசு விசாரணைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும், தாங்கள் நேர்மையான ஒரு போலீசு அதிகாரியின் உறவினர்கள் என்றும் எடுத்துக் கூறினர். ஆனால், இவற்றையெல்லாம் ஏற்க மறுத்து, நக்சலைட் ஒழிப்பு போலீசுப் படை அபிஜித் சின்ஹாவைக் கைது செய்து இழுத்துச் சென்றது. கொடிய சித்திரவதைக்குப் பிறகு அவர் 6-ம் தேதியன்று இரவு விடுவிக்கப்பட்டார். அடுத்த தாக்குதல் எப்போது நடக்குமோ என்று பீதியில் நடுங்கிய அவர், மறுநாள் ஓடும் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

மே. வங்கப் போலீசாரின் கொடூர சித்திரவதையே இக்கொலைக்குக் காரணம் என்று போலீசாரின் அதிக்கிரமத்தைக் கண்டித்து, சட்டமன்றத்தில் திரிணமுல் காங்கிரசு, சோசலிஸ்ட் ஐக்கிய மையம் ஆகிய எதிர்க்கட்சிகள் நீதி விசாரணை கோரி வெளிநடப்பு செய்தன. நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த மக்கள் யுத்தக் குழுவின் மே. வங்க மாநில முன்னாள் செயலாளரின் நாட் குறிப்பேட்டில் சின்ஹாவின் பெயர் இருந்ததாம்! இதுதான் அவர் ஒரு நக்சலைட் என்பதற்கான ஆதாரம் என்று கூறி, சின்ஹா கைது செய்யப்பட்டதையும் சித்திரவதை செய்யப்பட்டதையும் மே.வங்க இடதுசாரி அரசு வெட்கமின்றி நியாயப்படுத்துகிறது.

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 30-க்கும் மேற்பட்ட அறிவுத் துறையினரும் அரசு ஊழியர்களும் நக்சலைட் கூட்டாளிகள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டு கொடூரமாக வதைக்கப்பட்டுள்ளனர். ம.யு. குழுவிலிருந்து விலகிய முன்னாள் நக்சல்பாரிகள் முதல்



படிப்பகம்

www.padippakam.com



நகர்ப்புற படித்த இளைஞர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் வரை ஏறத்தாழ 300 பேரைக் கடந்த ஆண்டில் கைது செய்துள்ளோம் என்று பட்டியல் போடுகிறார், நக்சலைட் ஒழிப்பு நடவடிக்கைக்குத் தலைமையேற்றுள்ள உயர்போலீசு அதிகாரி. எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி, மனித உரிமை அமைப்புகளும் ஓய்வு பெற்ற போலீசு அதிகாரிகளும் மே.வங்கப் போலீசாரின் சட்டவிரோத கைது - சித்திரவதை, அட்டூழியங்களைக் கண்டித்துள்ளனர். ஆனாலும், ''போலீசாருக்கு எவரையும் விசாரணை செய்யவும் கைது செய்யவும் அதிகாரம் உள்ளது'' என்று அடக்குமுறை அரசு எந்திரத்தின் ஓர் அங்கமான போலீசுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார் 'இடது முன்னணி'யின் தலைவரான பிமன் போஸ். நக்சல்பாரி புரட்சியாளர்களை ''தெலுங்கானா கிரிமினல்கள்'' என்று சி.பி.எம். தலைவர்கள் அவதூறு செய்து கொண்டிருக்கின்றனர்.

மதராசா பள்ளிகள் தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதாக பயங்கரவாதப் பீதியூட்டி சிறுபான்மை முசுலீம்கள் மீது அவதூறு - அடக்குமுறை; பொதுக்கூட்டம் - பேரணி, ஆர்ப்பாட்டங்களுக்குக் கட்டுப்பாடுகள்; போலீசாருக்கு வரம்பற்ற அதிகாரம்; தீவிரவாத பீதியூட்டி புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களை ஒடுக்க நக்சலைட் வேட்டை; ''பொடா'' சட்டத்துக்குப் போட்டியாக மாநில அளவில் ''பொகா'' சட்டத்தைக் கொண்டுவர முயற்சி - என்று இந்துவெறி பாசிஸ்டுகளின் 'இடதுசாரி' பங்காளிகளாக போலி கம்யூனிஸ்டுகள் நாலுகால் பாய்ச்சலில் கிளம்பி விட்டார்கள்.



அப்பாவி மக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திய அமெரிக்காவின் கொலை வெறியாட்டத்தை எதிர்த்து தலைநகர் காபூலில் ஆப்கான் பெண்களின் ஆர்ப்பாட்டம். உள்ளே: அமெரிக்க குண்டு வீச்சுத் தாக்குதலில் படுகாயமடைந்த சிறுமி மாலிகா.

## ஆப்கான்: அமெரிக்காவின் நீடித்த பயங்கரவாதம்

**பி**ன்லேடனின் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரால், ஆப்கானை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள அமெரிக்க வல்லரசு, நீடித்த பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டு ஆப்கான் மக்களின் உயிர்வாழும் உரிமையையும் பறித்து வெறியாட்டம் போட்டு வருகிறது.

கடந்த ஜூலை முதல் நாளன்று ஆப்கானின் கந்தகார் பிராந்தியத்திலுள்ள ஒருஸ்கான் எனும் தென்பகுதி கிராமத்தின் மக்கள், தமது கிராமத்தில் நடந்த திருமண விழாவை வாண வேடிக்கையுடன் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இது ஏதோ பின்லேடன் குழுவினர் நடத்தும் ராக்கெட் தாக்குதல் என்று பீதியடைந்த அமெரிக்க இராணுவம், கண்மூடித்தனமாக வான்வழி குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி 50-க்கும் மேற்பட்டோரைப் படுகொலை செய்துள்ளது. நூற்றுக்கணக்கானோர் இத்தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர்.

ஏதோ எதிரி நாட்டின் மீது படையெடுத்து தாக்குவதுபோல இச்சிறிய கிராமத்தின் மீது 1000 கிலோ எடையளவுக்கு அமெரிக்க இராணுவம் குண்டுகளை வீசியுள்ளது. ஏறத்தாழ 3 மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ச்சியாக இத்தாக்குதலை நடத்தியுள்ளது. கை - கால்களை இழந்த பெண்கள், குற்றுயிரும் குலையுயிருமாக மருத்துவமனைகளில் உயிருக்குப் போராடும் குழந்தைகள், நொறுங்கிக் கிடக்கும் வீடுகள், அழுகி நாறும் கால்நடைகள் என்று அந்தக் கிராமமே அவலத்தில் தத்தளிக்கிறது. வழக்கம் போலவே இக்கோரக் கொலைகளை மூடிமறைத்து இப்படியொரு தாக்குதல் நடக்கவேயில்லை என்று அமெரிக்கா கூசாமல் புளுகியது. பின்னர் உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கி தலைநகர் காபூலில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடக்கத் தொடங்கியதும் வேறு வழியின்றி கவனக் குறைவினால் இத்தாக்குதல் நடந்துவிட்டதாக ஒப்புக் கொண்டுள்ளது.

இது ஏதோ முதன்முறையாக கவனக்குறைவாக நடக்கும் தாக்குதல் அல்ல. கடந்த ஜனவரியில் இப்பிராந்தியத்தில் தாலிபான் தலைவர் முல்லா ஓமர் பதுங்கியிருப்பதாக சந்தேகித்து அமெரிக்க இராணுவம் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி 21 கிராம மக்களைக் கொன்றொழித்தது. முல்லா ஓமர் கந்தகார் பகுதியில் பிறந்து வளர்ந்தவர் என்பதால், இப்பகுதியில் அவருக்கு மக்களிடம் ஆதரவு உள்ளதாக கருதிக் கொண்டு அவ்வப்போது திடீர் வான்வழித் தாக்குதலை நடத்திப் பலரைக் கொன்றொழித்துள்ளது.

கடந்த ஆண்டில் ஹமீது கர்சாய் தலைமையில் இடைக்கால பொம்மை அரசு பதவியேற்றபோது, அரசு ஆதரவுப் படைகள் தலைநகரில் ஊர்வலமாகச் சென்றபோது, அமெரிக்கப் போர்விமானங்கள் அவற்றின் மீது திடீர்த் தாக்குதல் நடத்திப் பலரைக் கொன்றொழித்தது. இதற்காக இன்றுவரை அமெரிக்கா வாயளவில் கூட வருத்தம் தெரிவிக்கவில்லை. மாறாக, இப்படைகள் பின்லேடனின் அல்கொய்தா படைகள்தான் என்று அமெரிக்கா இன்னமும் சாதித்து வருகிறது. இப்போதும்கூட, தாக்குதல் நடத்தப்பட்ட கிராமத்தில் தாலிபான் - அல்கொய்தா படையணியின் முக்கியத் தலைவர்கள் பதுங்கியிருந்தனர் என்று தனது கொலைவெறியாட்டத்துக்கு நியாயம் கற்பிக்கிறது. மேலும் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை பற்றியும் உண்மைகளை மூடிமறைத்து 5 பேர் மட்டுமே மாண்டதாகவும் 11 பேர் காயமடைந்ததாகவும் புளுகி வருகிறது. ஆனால் அதிபர் கர்சாய் 46 கிராம மக்கள் கொல்லப்பட்டதாகவும் 136 பேர் படுகாயமடைந்ததாகவும் அதிகாரபூர்வ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

உலகெங்கும் மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போரை நடத்திவரும் அமெரிக்க வல்லரசு, ''முதலில் சுடு; பிறகு விசாரணையை நடத்து!'' என்பதையே தனது அறிவிக்கப்படாத ஜனநாயகக் கொள்கையாகக் கொண்டுள்ளது. ஜூலை முதல் நாளன்று ஒருஸ்கான் கிராமத்தில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திய அமெரிக்க கொலைகார இராணும், இப்போது அங்கே உள்நாட்டு விசாரணை மன்றத்தை நிறுவி நியாயவானாக நாடகமாடுகிறது.

●○●



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிகளுக்குத் தரிசு நிலம்! விவசாயிகளுக்குத் திருவோடா?

நாட்டிலுள்ள தரிசு நிலங்களை எல்லாம் மேம்படுத்தி விளைநிலங்களாக மாற்றுவதற்கு மைய, மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் இறங்கி விட்டன. 'இலாபகரமாக நடத் துவது; தனியார்மய மாக்குவது' - என்ற பெயரில் அரசின் பொதுத் துறைகள் பன்னாட்டு நிறுவனங்க ளுக்குத் தாரை வார்க்கப்படுவதைப் போலவே, விவசாயத்தையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இரையாக்குவதுதான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரே நோக்கம்.

இதற்காக மைய அரசு 'ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு திட்டம் (IWDP) என்ற திட்டத்தை 'நபார்டு' வங்கியின் மூலம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்படி 10,20 விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து, வேளாண்மைத் துறையின் உதவியோடு பழப்பண்ணை, காய்கறி, மலர்ப் பண்ணைகள் அமைக்கலாம்; இதற்கு நபார்டு வங்கி 1 கோடி ரூபாய் வரை நீண்ட காலக் கடன் தரும்' என முதல்கட்டமாக அறிவித்தனர். அறிவிப்போடு சரி.

நடைமுறையிலோ, பன்னாட்டு பகாசுர நிறுவனங்களுக்கு நமது நிலங்களைத் தாரைவார்க்கும் வகையில் தரிசு நிலங் களை மேம்படுத்த 'தனியாரை ஊக்குவிப் பது, தொழில்துறையினரும், விவசாயி களும் கூட்டாகச் செயல்படுவது' - என்ற புதிய திட்டத்தை மைய அரசு உடனே அறி வித்தது.

இதனடிப்படையில், இந்தியாவிலேயே முதன்முறையாக ஆந்திர மாநிலத்தில் ''அரசு நிலங்களைத் தனியாருக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் நீண்ட காலக் குத்தகைக்கு விடும்'' - திட்டத்தை சந்திரபாபு நாயுடு நடைமுறைப்படுத் தினார். இந்த ''ஹைடெக்'' எட்டப்பனின் வழியைப் பின்பற்றி தமிழகத்தில் 'ஒப்பந்த தொழில் நிறுவனங்கள் மற்றும் காய்கனி விவசாயக் கொள்கையை' கடந்த 2000 ஏப்ரல் மாதத்தில் கருணாநிதி அறிவித்தார்.

நமது பாரம்பரிய விவசாயத்தையும் விவசாயிகளையும் ஒழித்துக் கட்டும் வகையில் ''ஒப்பந்த முறை விவசாயத் துக்குத் தொழில்துறை தகுதியளிப்பது, உள்நாட்டு - வெளிநாட்டு நிறுவனங்க ளுக்கு அரசு நிலங்களை 30 வருடக் குத்த கைக்கு விடுவது, இதன் மூலம் 12,000 கோடி ரூபாய் முதலீட்டை விவசாயத்துக்கு ஈர்ப்பது'' என்றும் தி.மு.க. அரசு அறிவித் தது.

மேலும் ''இத்திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனங்களுக்குத் திட்ட முதலீட்டில் 20%மும், மாசுக் கட்டுப்பாட்டுத் துறைக் கான அனுமதிக் கட்டணம் ரூ.10,000-மும் மானியம் தரப்படும்'' என்றும் அறிவிக்கப் பட்டது. இது நடைமுறைக்கு வரும் முன் ஆட்சி மாறியது.

கஜானா காலி என்ற ஒப்பாரியுடன் ஆட்சிக்கு வந்து கருணாநிதி அறிவித்த கவர்ச்சித் திட்டங்களை எல்லாம் கைகழுவி விட்ட ஜெயலலிதா, 'அரசு நிலங்களைத் தனியாருக்கு குத்தகைக்கு விடும்' திட்டத்தை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அந்நியனுக்குச் சேவை செய்வதில் நான் கருணாநிதியின் உடன்பி றவா சகோதரி என்பதை நிரூபிக்கும் வகையில் மேலும் பல சலுகைகளையும் அறிவித்துள்ளார். இதுதான் ஜெயாவின் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்!

**சலுகைகளும் விளைவுகளும்!**

★ தொடர்ந்து 8 வருடம் பயிர்செய் யாத நிலங்களே தரிசு நிலம் என்றிருந்த முந்தைய வரையறையை 1 வருடமாக ஜெயா அரசு குறைத்து விட்டது.

''பன்னாட்டு பகாசுர நிறுவனங்களோ, உள்நாட்டு பெரிய தரகு முதலாளி நிறுவ னமோ 1000 ஏக்கர் வரை தரிசு நிலங் களைக் குத்தகைக்கு எடுக்கலாம். உச்ச வரம்பைத் தளர்த்தவும் விதிவிலக்கு உண்டு.'' நில உச்சவரம்புச்சட்டத்தை இதை விட வேறு யாரும் கேலிக் கூத்தாக்க முடி யாது. ''10 லட்சம் ஏக்கர் அரசு புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்கள் மட்டுமல்ல தனியார் பட்டா நிலத்திலுள்ள தரிசும் இத்திட்டத் திற்கு பொருந்தும்.''

★ ''நிலத்தின் மதிப்பில் முதல் ஆண்டு 1%, 2-ம் ஆண்டு 2%, 3-ம் ஆண்டு 3%, 4-ம் ஆண்டிலிருந்து 4% மட்டுமே குத்தகைத் தொகையாக மதிப்பிடப்படும்.'' நிலத்தை தானமாகத் தருவதற்கு பதில் பெயரளவுக்கு ஒரு தொகை என்பது தவிர வேறென்ன இது?

★ அதிகபட்சம் 30 வருடத்துக்குக் குத்தகை விடப்படும். 3 வருடத்தில் பலனைக் காட்ட வேண்டும். இதற்குத் தேவையான மின் வசதி, தண்ணீர் வசதி ஆகியவை முன்னு ரிமை கொடுத்து செய்து தருவோம்'' என்று சலுகைகளை அள்ளி இறைக்கிறார் ஜெயா. 1 ஏக்கர் நிலத்தை 30 வருடக் குத்தகைக்கு விட்டால் சுமார் 1.5 லட்சம் ரூபாய் கிடைக்கும் என போண்டி யாகிப் போன நடுத்தர விவசாயிகளுக்கு வலை வீசுகின்றனர் அதிகாரிகள்.

ஏற்கனவே விவசாயத்தில் நட்டமாகி - கடன்பட்டு - நிலத்தை விட்டே ஓடிக் கொண்டிருக்கும் விவசாயிகள் ஓராண்டு விவசாயம் செய்யவில்லை என்றாலே, 'தரிசு' நிலம் எனக் கூறி விவசாயியின் நிலத்தைப் பறித்து பகாசுர நிறுவனங்க ளிடம் தாரை வார்த்து விடுவார்கள். குத்த கைக்கு எடுக்கும் அந்நிறுவனங்கள் இலாப கரமான - ஏற்றுமதிக்கான பயிர்களையே விவசாயம் செய்வார்கள். அதில் களை எடுப்பு, தண்ணீர் பாய்ச்சுவது என கூலிக்கா ரனுக்கு எந்த வேலையும் இருக்காது. நிலத் தையுமிழந்து வேலையுமிழந்து விவசாயி என்னவாவான்?

மேலும், குத்தகை நிறுவனங்கள் 30 வருடத்தில் என்ன பயிரிடுவார்கள்? என்ன மருந்து - உரத்தைப் போடுவார்கள்? என்பதை விவசாயிகள் தீர்மானிக்க முடி யாது! டெர்மினேட்டர் விதைகள் போன்ற மரபினப் பயிர்களால் விளைநிலங்கள் நாச மானால் நட்ட ஈடும் பெற முடியாது! 30 வருடத்துக்குப் பின் அந்த நிலம் குப்பை மேடாகி விடும்.

இன்னுமொரு மிகப் பெரிய அபா யமும் இதில் உள்ளது. குத்தகைக்கு எடுக்கும் பகாசுர நிறுவனங்கள் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் சுற்று வட்டா ரத்திலுள்ள நிலத்தடி நீரையெல்லாம் ஒட்டச் சுரண்டி விடுவார்கள். இந்நிலத்தைச் சுற்றி யுள்ள சிறு விவசாயிகள் சிறிதளவு நிலமி ருந்தாலும் நீரின்றி, விவசாயம் செய்ய முடி யாமல் போண்டியாவார்கள். அந்நிலங்க ளையும் வளைத்துப் போடலாம்.

**தரிசை எப்படி மேம்படுத்தப் போகிறார்கள்?**

ஏழை நாடுகளின் விளைநிலங்களை வளைத்துப் போட்டு அதில் குறைந்த செலவில் காய்கறிகளைப் பயிரிட்டு அதிக இலாபத்திற்கு விற்றுக் கொள்ளையடிக் கலாம் என்று வெறிநாயாக அலைகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். இவற்றின் வெறிக்கு இரையாக நம் நாட்டு தரிசு நிலங் களைப் பலியாக்குவதுதான் தரிசு நில



படிப்பகம்

www.padippakam.com

மேம்பாட்டுத் திட்டம்!

இதோ... சமீபத்தில் வெளியான சில பத்திரிக்கை செய்திகளைப் பாருங்கள்; உண்மை புரியும்!

''மலேசிய பாமாயில் ஆலை முதலாளிகள் தங்கள் ஆலைகளை இந்தியாவில் விரிவாக்க முயற்சித்து வருகின்றனர். இதற்காக ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் எண்ணைப் பனை பயிரிடும் நிலங்களைத் தேர்வு செய்வதில் ஈடுபட்டு உள்ளனர்.''

''நெதர்லாந்து நாட்டு உதவியுடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் 500 ஏக்கர் பரப்பளவில் தக்காளி - மிளகாய் பயிரிடும் பெரிய பண்ணையை கம்பம் பள்ளத்தாக்கில் அமைக்க மைய அரசு முயற்சித்து வருகிறது. இதற்காக நிலங்கள் விவசாயிகளிடமிருந்து குத்தகைக்கு வாங்கப் படும்.''

''போட்டிமிக்க உலகச் சந்தையில் நாம் தாக்குப்பிடித்து நிற்க வேண்டுமானால் விவசாயத்தில் தனியார் - தொழில் நிறுவனத்தினரின் முதலீடு அதிகரிக்க வேண்டும்'' திருச்சியில் காவிரிப் பாசன விவசாயிகள் பங்கேற்ற கருத்தரங்கில் தமிழக வேளாண் துறை செயலர் அறிவிப்பு!



**காவிரியில் தண்ணீர் வராததால் தனது நிலம் பாளம் பாளமாக வெடித்துக் கிடப்பதைக் காட்டும் பண்டாரவாடை கிராம விவசாயி; தரிசு நில மேம்பாடு திட்டத்தின் அடுத்த குறி இவரைப் போன்ற சிறு விவசாயிகள்**

### உலகச் சந்தைக்கு உதவாதவன் உயிரோடு இருந்து என்ன பயன்?

'காட்' ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்து போட்டபோது 'உலகச் சந்தை நமக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது. இனி கோவணம் கட்டிய நம் விவசாயி காய்கறிக் கூடையுடன் விமானத்தில் பறக்கப் போகிறான்' - என்று தனியார்மய ஆதரவாளர்கள் தொண்டை கிழியக் கத்தினார்கள். ஆனால், உலகச் சந்தை - ஏற்றுமதிக்கான உற்பத்தி என்பது விநோதமான பல மர்மங்கள் நிறைந்த தனிவகை உலகம்.

ஒரு திராட்சைப் பழம் 10 கிராம் எடை இருக்க வேண்டும். பழக்கொத்தின் காம்பு 15 செ.மீ நீளமிருக்க வேண்டும். அமெரிக்கர்களுக்குப் புளிப்பு கலந்த இனிப்புதான் பிடிக்கும். காய்கறிகளில் இரசாயன உரம் - மருந்து அளவு குறிப்பிட்ட அளவுதான் இருக்க வேண்டும்'' என பல தரக் கட்டுப்பாடுகள் உள்ளது. இதை மீறினால் நீங்கள் அனுப்பிய சரக்குகள் அனைத்தும் திரும்பி விடும். போக்குவரத்து செலவை அனுப்பியவரே ஏற்க வேண்டும். இதுவெல்லாம் நம் சராசரி விவசாயிகளால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத விசயங்கள். இது முடியுமா?

இவ்வாறு உலகச் சந்தைக்கும் - பன்னாட்டு நிறுவனங்களுக்கும் துளிகூட பயன்படாத ஓட்டாண்டி விவசாயிகளால் என்ன இலாபம்? இவர்களுக்கு ஏன் இலவச மின்சாரம், உர மானியம், ரேசன் அரிசி, இலவச மருத்துவ வசதி செய்துதர வேண்டும்? இவர்களை ஒரேயடியாக [illegible]க் கட்டிவிட்டு நிலங்களைப் [illegible]துப் பன்னாட்டு நிறுவனங்களிடமே நேரடியாக ஒப்படைத்து விடுவதுதான் நாட்டுக்கு இலாபம் - என்பதுதான் மைய - மாநில அரசுகளின் ஒரே கொள்கை!

''1 ஹெக்டேர் தரிசு நிலத்தை மேம்படுத்த 8 லட்சம் ரூபாய் தேவை. நாட்டிலுள்ள 17.50 கோடி ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்த சுமார் 140 கோடி ரூபாய் ஒதுக்கினாலே போதும்'' என்று வேளாண் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால், கோடிகணக்கான விவசாயிகளின் ஓட்டை மட்டும் வாங்கும் ஓட்டுப் பொறுக்கி கும்பலோ, அவர்களின் நலனுக்காக இந்த பிசாத்து காசு 140 கோடி ரூபாயைக்கூட விவசாயத்தில் முதலீடு செய்ய மறுக்கிறது. மாறாக, விவசாயத்தைப் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் திறந்துவிட்டு, ''12,000 கோடி ரூபாய் தனியார் முதலீடு விவசாயத்துக்கு ஈர்க்கப்படும்'' என்றும் ''விவசாயத்தில் தொழில்துறையினரை ஈடுபடுத்தி தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்குவேன்'' என்றும் காதில் பூ சுற்றுகிறார்கள்.

நில உச்ச வரம்புச் சட்டம் என்பது மேல்சாதி பண்ணைக் கும்பலுக்குச் சாதகமாக வளைத்தும், திரித்தும் மோசடியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது ஊர றிந்த இரகசியம். இப்படிப் பட்ட நிலையில்தான் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை வளைத்துப் போட்டுக் கொள்ள தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது, நாளை காகிதச் சட்டமான நில உச்ச வரம்புச் சட்டத்தை அடியோடு நீக்குவதில் போய் முடியும். வெள்ளையன் காலத்தில் இருந்த ''ஜமீன்தாரி'' முறையை நவீன முறையில் புகுத்த சதித் திட்டம் போடுகிறது, ஜெயா கும்பல். அதன் முதல்படிதான், இந்த ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

விவசாயிகள்தான் நாட்டின் முதுகெலும்பு எனக் கூறிக் கொண்டு, அந்த முதுகெலும்பையே உடைத்துப் போடுகிறது, ஓட்டுப் பொறுக்கும் எட்டப்ப கும்பல். எனவே, மாறி மாறி ஓட்டுப் போட்டு இனியும் ஏமாறப் போகிறோமோ? இல்லை, ''உழுபவனுக்கே நிலம்; உழைப்பவனுக்கே அதிகாரம்'' என்ற முழக்கத்தை முன் வைத்துப் போராடி வரும் புரட்சிகர விவசாய அமைப்புகளில் இணையப் போகிறோமோ என்பதுதான் தமிழக விவசாயிகள் முன் நிற்கும் கேள்வி!

● அழகு


படிப்பகம்

www.padippakam.com

# பண்ணைச் சுரண்டலுக்கு எதிராகக் குத்தகை விவசாயிகளின் போராட்டம்

இந்தியாவில் நிலப்பிரபுத்துவம் எங்கே இருக்கிறது எனச் சிலர் அதிமேதாவித்தனமாக கேள்வி எழுப்புகின்றனர். நாடு முழுவதும் பண்ணை நிலப்பிரபுக்கள் எப்படி கொடூரமாகச் சுரண்டிக் கொழுக்கின்றனர் என்பதற்குக் கீழுள்ள செய்தி ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல இருக்கிறது. மேலும், அரசின் நில உச்சவரம்புச் சட்டம் எந்த அளவுக்கு கேலிக்கூத்தான முறையில் நடைமுறைப்படுத்தப் படுகிறது என்பதையும் அம்பலப்படுத்துகிறது.

போடி ஜமீனுக்குக் கட்டுப்பட்ட இராணிப் பண்ணை உரிமையாளர் வீரகாமுலம்மாளுக்கு போடி வட்டாரத்தில் மட்டும் சுமார் 600 ஏக்கருக்கு மேல் நிலமுள்ளது. 1962-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டப்படி இதில் சுமார் 500 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசு கையகப்படுத்தியது. இந்த 500 ஏக்கர் நிலத்திலும் 200 விவசாயிகள் 3 தலைமுறையாக குத்தகைதாரர்களாக உழவடை செய்து வருகின்றனர்.

அரசு உபரி நிலமாக கையகப்படுத்திய பிறகும்கூடச் சட்ட விரோதமாக 500 ஏக்கர் நிலத்தையும், உழவடை விவசாயிகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளையடித்து வருகிறது இராணிப் பண்ணை! நில உச்சவரம்புச் சட்டத்தின் சந்து பொந்துகளில் கரைகண்ட அரசு அதிகாரிகளும் இராணிப் பண்ணையின் பகற் கொள்ளைக்குத் துணை நிற்கின்றனர்.

**கொள்ளையோ கொள்ளை!**

உழவடை செய்யும் விவசாயிகள், சொந்த ஆட்களை வைத்து வேலை செய்யக்கூடாது. பண்ணையின் கொத்தடிமைகள் மற்றும் அடியாட்களை மட்டுமே வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். இவர்களின் கூலியைப் பண்ணையே தீர்மானித்து, விவசாயிகளிடம் வசூலித்துக் கொள்ளும்.

**நாற்றுப்பாவும்போது - நாற்றாங்கால் சுதந்திரம்**
**வயலில் நடும்போது - நடவு சுதந்திரம்**
**உரமிடும்போது - ஆள் கூலி**
**வாய்க்கால் பராமரிக்க - ஆள் கூலி**

இவை எல்லாம் விவசாயிகளிடம் பணமாக வசூலிக்கப்படுவது.

பிறகு அறுவடையின் போது, 1. சாமி நெல், 2. படுக்கை நெல், 3. களம் செதுக்கு நெல், 4. தூத்துக் கூலி, 5. சாணிப்பால் நெல், 6. இனாம் நெல், 7. கங்காணம் நெல், 8. வண்டிவாடகை நெல், 9. காவல், நீராணி நெல், 10. தண்ணீர் பாய்ச்சுபவர்களுக்காக 1 குழிக்கு (60 செண்ட்) 10 மரக்கால் நெல் என பத்துவகை நெல்லைப் பண்ணைக்குக் கொடுத்து விட வேண்டும். இவை எல்லாம் தவிர குத்தகையாக 3-ல் 1 பங்கு நெல் பண்ணைக்குக் கொடுக்க வேண்டும்!



உழவடை விவசாயிகள் 6 மாதம் உழைத்து, கடன்பட்டு விளைவித்த நெல்லில் முக்கால் பங்கைப் பண்ணைக்கு அளந்து கொடுத்துவிட்டு, 5,6 மூடைகள்தான் விவசாயிகள் வீடு வந்து சேரும்!

எந்தச் சட்டத்திலும் இல்லாத இந்த சுரண்டலுக்கு அரசு அதிகாரிகளும், சில ஓட்டுக் கட்சிகளும் முணுமுணுப்புக்கூட காட்டாமல், முழு ஒத்துழைப்பு தந்தனர். இதைத் துணிச்சலாக எதிர்த்துக் கேட்ட விவசாயிகளைக் குத்தகை உரிமையைப் பறித்துக் கொண்டு விரட்டினார்கள்; அல்லது அடியாட்களையும், போலீசையும் வைத்து மிரட்டிப் பணிய வைத்தனர்.

இராணிப் பண்ணையின் கொள்ளைச் சுரண்டலும், அடக்குமுறையும் தொடர்ந்தாலும், இதற்கு எதிரான விவசாயிகளின் கலகக் குரலும் தொடர்ந்தது. இதன் விளைவாக உழவடை விவசாயிகள் 200 பேரும் **'சிறு விவசாயிகள் நலச் சங்கம்'** என்ற பெயரில் ஒன்றுபட்டு போராடத் தொடங்கினர்.

சங்கத்தின் விடாப்பிடியான போராட்டத்தால் விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை மறுக்க வழியின்றி, முதல் கட்டமாக 72 பேருக்கு அரசு பட்டா வழங்கப்பட்டது. அரண்டு போன இராணிப் பண்ணை சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி பட்டா வழங்குவதற்கு எதிராகத் தடையாணை வாங்கியது!

இதற்குப் பதிலடியாக, 'இனிமேல் பண்ணையாட்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை. சங்கமே இனிமேல் சுதந்திரமாக ஆள் வைத்து வேலை செய்யும்' என அறிவித்து உடனடியாக இதை நடைமுறைப்படுத்தினார்கள் விவசாயிகள்.

தங்கள் உத்தரவுக்குப் பணிந்தே பழக்கப்பட்ட கொத்தடிமைக் கூட்டத்தின் முதல் கலகக் குரலைக் கேட்டு மிரண்டு போன பண்ணை கும்பல், போலீசிடமும் அதிகாரிகளிடமும் ஓடியது. விவசாயிகளை அழைத்துக் கட்டைப் பஞ்சாயத்து நடத்தி, தோற்றது அதிகார வர்க்கம்.

போராட்டத்தின் அடுத்த கட்டமாக, அரசு கையகப்படுத்திய நிலத்துக்கு, பண்ணைக்கு ஏன் குத்தகை தரவேண்டும்? இனி குத்தகை தராமலே அறுவடை செய்வது என முடிவெடுத்தது சங்கம். இதன்படி விவசாயிகள் திரளாகச் சென்று ஒரு நிலத்தில் அறுவடை செய்தனர். தகவலறிந்த பண்ணைக் கும்பல் தன் அடியாள்களை ஏவிக் கலவரத்தை உருவாக்கப் பார்த்தது. இது நடக்கும் என எதிர்பார்த்த விவசாயிகள், அடிதடியில் இறங்காமல் கைகலப்பிலேயே காரியத்தை முடித்து அறுவடையைக் கொண்டு வந்துவிட்டனர்.

ஆனால், பண்ணைக் கும்பலோ, 'விவசாயிகள் அடித்துக் காயப்படுத்தியதாக'


படிப்பகம்

www.padippakam.com

போலீசில் பொய்ப் புகார் கொடுத்தது. விவசாயிகளும் பதிலுக்கு ஒரு புகார் கொடுத்தனர். பண்ணையின் புகாருக்கு வி.வி.மு. தோழர்கள் 3 பேர் உட்பட 8 பேர் மீது வழக்கு பதிவு செய்த போலீசு, விவசாயிகளின் புகாரை ஏற்க மறுத்தது.

இந்நிலையில், விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதிமுக போடி நகரச் செயலர் போதுமணி தலையிட்டு தொகுதி எம்.எல்.ஏ. ராமராசு முன்னிலையில் இருதரப்பும் பேசி முடித்துக் கொள்வதாக போலீசு ஸ்டேசனில் பேசி சமரசம் செய்து வைத்தார்.

ஆனால், பேச்சு வார்த்தைகளால் பயன் ஏதுமில்லை. மாறாக, பண்ணைக் கும்பல் 200 அடியாட்களைத் திரட்டி வந்து, விவசாயிகள் தமது விளைச்சலை அறுவடை செய்ய விடாமல் விரட்டியது. சங்கமோ மாவட்ட ஆட்சியர், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ஆகியோரிடம் மனுச் செய்தது. மீண்டும் பேச்சு வார்த்தை என அடுத்த சுற்று தொடங்கியது. இம்முறை அதிகார வர்க்கம் நைச்சியமாகப் பேசி, பண்ணையின் சுரண்டல் ஆதிக்கத்திற்கு சாதகமாக ஒரு தற்காலிக ஒப்பந்தத்தைச் நிறைவேற்றி விட்டது.

இந்த பேச்சு வார்த்தையில் பங்கேற்று வி.வி.மு. தோழர் முன் வைத்த நியாயமான கோரிக்கைகளுக்கு அதிகார வர்க்கம் செவி சாய்க்கவில்லை. அனுபவம் இல்லாத சங்கத் தலைமையோ ஒப்பந்தம் நிறைவேறிய பின்பு, ஏமாந்து போனோமே என்று பதவியை ராஜினாமா செய்தது. தற்போது சிறு விவசாயிகளை வி.வி.மு. அணிதிரட்டி வருகிறது. இனி பண்ணைக் கும்பலின் ஆதிக்கக் கனவு தவிடுபொடியாவது உறுதி.

**– விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**போடி கிளை, தேனி மாவட்டம்.**

# இலவச மின்சாரம் ரத்தாகிறது! – இந்தியா பன்னாட்டு கம்பெனிகளின் சொத்தாகிறது!

விவசாயத்துக்கான எல்லா வகை மானியங்களும் சலுகைகளும் ரத்தாகி விட்ட நிலையில் எஞ்சியிருக்கும் ஒரே சலுகையான இலவச மின்சாரத்துக்கும் வேட்டு வைத்து விட்டது பாசிச ஜெயா அரசு. இவ்வாண்டு பட்ஜெட்டில் இலவச மின்சார மானியத்தில் 300 கோடி ரூபாயைக் குறைத்துள்ளதோடு, விவசாய பம்பு செட்டுகளுக்கு மீட்டர் பொருத்த ரூ. 400 கோடியை ஒதுக்கியுள்ளது. காட் ஒப்பந்தம் மற்றும் உலக வங்கியின் உத்தரவுப்படி இலவச மின்சாரத்தை ரத்து செய்துவிட்டு பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம் விதிப்பதுதான் ஜெயா அரசின் உண்மையான நோக்கம். இதை மூடி மறைத்துவிட்டு, விவசாயிகள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவை அறிந்து கொள்ளவே மீட்டர் பொருத்தப்படுகிறது என்று நயவஞ்சகமாக நாடகமாடுகிறார் ஜெயா.



திருவெண்ணெய் நல்லூரில் நடந்த தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்.

விவசாயம் என்பதே இயற்கையோடு நடத்தும் சூதாட்டமாக மாறி ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான சிறிய, நடுத்தர விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறி விட்டனர். இலவச மின்சாரம் ரத்தானால் இந்த எண்ணிக்கை மேலும் பல மடங்காக உயரும். உணவுப் பொருள் உற்பத்தி குறைந்து விலைவாசி உயரும். விவசாயத்தை நம்பியுள்ள சிறு தொழில்களும், வியாபாரமும் நாசமாகும். வேலையின்மை பெருகும். இறுதியில் நாடே சோற்றுக்குக் கையேந்தும் நிலை உருவாகும்.

விவசாயிகளால் கைவிடப்பட்ட நிலங்கள் தரிசு நிலமாகும். அதை தரிசு நில மேம்பாடு என்ற பெயரில் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் உள்நாட்டுப் பெரு முதலாளிகளும் கைப்பற்றுவார்கள். இவ்வாறு தங்களின் பகற்கொள்ளைக்காக நம் நாட்டு விவசாயத்தையே நாசமாக்குவதும், விவசாயிகளை நிலத்தை விட்டே விரட்டியடிப்பதும்தான் ஏகாதிபத்திய வல்லரசுகளின் நோக்கம். இதற்காகவே இலவச மின்சாரத்தை ரத்து செய்! ஆற்றுப் பாசனத்துக்கும் கட்டணம் வசூல் செய்! என்று உலக வர்த்தகக் கழகம் ஆணையிடுகிறது.

எனவே, இலவச மின்சாரம் ரத்து என்பது விவசாயிகளின் பிரச்சினை மட்டுமல்ல; நம்நாடு மீண்டும் காலனியாக்கப்படும் பேரபாயத்தின் ஓர் அங்கம்! மேலும், இலவச மின்சாரம் என்பது ஊழல் ஜெயா, தான் கொள்ளையடித்த சொத்தில் போடும் பிச்சை அல்ல; அது விவசாயிகள் உதிரம் சிந்தி போராடிப் பெற்ற உரிமை!

இந்த உண்மைகளை விளக்கி விவசாயிகள் விடுதலை முன்னணி தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கடந்த ஜூன் மாதத்திலிருந்து பிரச்சார இயக்கத்தை நடத்தியது. துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள், மிதிவண்டி ஊர்வலம் முதலான வடிவில் நடந்த இப்பிரச்சார இயக்கத்தின் இறுதியில், மதுரை மாவட்டம் - திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டியிலும், தேனி மாவட்டம் - கடலூர் மற்றும் கே.கே. பட்டியிலும், விழுப்புரம் மாவட்டம் - திருவெண்ணெய் நல்லூரிலும் 15.7.02 அன்று எழுச்சிமிகு தொடர்முழக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இலவச மின்சாரத்தை ரத்து செய்யாதே! நாட்டை மீண்டும் அடிமையாக்காதே! விவசாயத்தை அழிக்காதே! ஆகிய மைய முழக்கங்களுடன் நடந்த இந்த தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. வட்டார அமைப்பாளர்களும் தோழமை அமைப்பினரும் சிறப்புரையாற்றினர். விவசாயிகளின் பம்பு செட்டுகளில் மீட்டர் பொருத்தப்படுமானால் அதைப் பிடுங்கி வீதியில் எறிந்து போராடுவோம் என்று சூளுரைத்து நடந்த இந்த தொடர்முழக்க ஆர்ப்பாட்டம் விவசாயிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது. விவசாயிகளும் உழைக்கும் மக்களும் தாராளமாக நன்கொடை அளித்து உதவியதோடு, திரளாக இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் பிரச்சார இயக்கத்தில் பங்கேற்று ஆதரித்தனர்.



**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி, மதுரை, தேனி, விழுப்புரம் மாவட்டங்கள்.**


படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

2002, மார்ச்சில் நடந்த சி.பி.(எம்) கட்சியின் ஐதராபாத் மாநாட்டில் தனது அரசியல் - அமைப்பு அறிக்கையை அறிமுகப்படுத்திய அதன் பொதுச் செயலாளர் அரிகிசன் சிங் சுர்ஜித், பின்னடைவு - தேய்வுக்குள்ளாகி இருக்கும் சி.பி.(எம்) கட்சி பரிதாபகரமான நிலைமையில் இருப்பதாகப் புள்ளி விவரங்களுடன் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதற்கான காரணங்களை அலசி ஆராய்ந்த பிறகு, கட்சியின் நெருக்கடிக்கான தீர்வாகச் செக்குமாட்டுத்தனமான வழிகாட்டுதல்களையே சுர்ஜித் முன்வைக்க, கட்சியும் ஏற்றுக் கொண்டு விட்டது. இதிலிருந்து சி.பி.(எம்) கட்சி ஒரு வழிப் பாதையில் வெகுதூரம் போய் ஒரு முட்டுச் சந்தில் சிக்கித் திணறுவதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

''பலவீனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன; வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அடிக்கோடிட்டு வலியுறுத்தப்பட்டன'' என்று சுர்ஜித்தின் உரைக்குத் தலைப்பிட்டு கட்சியின் அதிகாரபூர்வ ஏடு ''மக்கள் ஜனநாயகம்'' (பி.டி) எழுதியிருக்கிறது. ஆனால், கட்சியின் பலவீனங்கள் பற்றிய புலம்பலும், அரைத்த மாவையே அரைக்கும் வழிமுறைகளும்தான் அவரது உரையில் உள்ளன.

இந்த உரைக்கு ''பி.டி.'' கொடுத்துள்ள துணைத் தலைப்பே (கட்சியின்) ''பரிதாபகரமான நிலை'' என்பதுதான். கட்சியின் பேராயத்தில், அதன் தலைமையே பகிரங்கமாக இப்படி அறிவிக்கிறது என்றால், அக்கட்சி என்ன செய்ய வேண்டும்; கட்சியை இந்த நிலைக்குத் தள்ளியது அரசியலா, தலைமையா என்று ஆழமாகப் பரிசீலித்து, அவசர, அவசியமான பாரிய மாற்றங்கள் செய்ய வேண்டாமா? சி.பி.(எம்) கட்சி அப்படிச் செய்யவில்லை. கோவில் பூசாரி மணியை ஆட்டி, அர்ச்சனை வரிகளைக் கொட்டுவதைப் போல செய்திருக்கிறது. அதற்குக் காரணம், சி.பி.(எம்) கட்சிக்கு இந்த நிலை ஒன்றும் புதிதல்ல. பல ஆண்டுகளாக நீடிக்கும் தீராத பக்கவாத நோய் அக்கட்சிக்குப் பீடித்திருப்பதுதான் காரணம்.

கட்சியின் ''பரிதாப நிலை'' குறித்து சுர்ஜித் ஆற்றிய உரையை ''பி.டி.'' பின்வருமாறு எழுதுகிறது; ''விவாதத்துக்கு சுர்ஜித் எடுத்துக் கொண்ட மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை, கட்சியின் விரிவாக்கம் மற்றும் உறுதிப்பாடு பற்றியது; குறிப்பாக, கட்சி மற்றும் இடசாரி இயக்கம் பொதுவில் ஏற்கெனவே பலவீனமாக உள்ள மாநிலங்கள் பற்றியது. இதுவரையிலான எல்லா (கட்சி) காங்கிரசுகளிலும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் ஒரு பிரச்சினையாக இது இருக்கிறது. ஆனால், பிரச்சினை இன்னமும் நீடித்திருப்பது நமக்குள் எங்கேயோ, எதிலேயோ குறைபாடு இருப்பதைக் காட்டுகிறது.''

ஆக, இந்தப் பிரச்சினை பல காங்கிரசுகளாக, பல ஆண்டுகளாகத் தீர்க்க முடியாமல், குறைபாடு எங்கே, எதிலே இருக்கிறது என்று அறிய முடியாததாக நீடிக்கிறது என்று தெரிகிறது. கட்சியை விரிவுபடுத்துவது, உறுதிப்படுத்துவது என்பது மட்டுமிருந்தால் கட்சி தேக்க நிலையில் இருப்பதாக மட்டுமே பொருள்படும். ஆனால், சி.பி.(எம்) கட்சியில் உள்ள நிலைமையோ அதற்கும் மேலாக பரிதாபகரமான பின்னடைவு - தேய்வுக்குள்ளாக இருக்கிறது.

''நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால், கட்சி உறுப்பினர்கள், கட்சியின் தலைமையிலான பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் சில தேர்தல்களில் கட்சிக்குக் கிடைத்த ஓட்டுகள் ஆகியவை கட்சியின் மிகமிக மோசமான நிலையைத்தான் காட்டுகின்றன.'' இந்த முடிவுக்கு வருவதற்கு ஆதாரமாக முதலில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொள்கிறார் சுர்ஜித். நாடு முழுவதும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 7,96,073 என்றாலும் இதில் மிக மிகப் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் சி.பி.(எம்) கட்சி ஆளும் / ஆண்ட கட்சியாக உள்ள மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களில்தான் உள்ளனர். இவற்றோடு ஆந்திரம், தமிழ்நாடும் சேர்ந்து மொத்தக் கட்சி உறுப்பினர்களில் சுமார் 90 சதவீதத்தினர் உள்ளனர். பிற எல்லா மாநிலங்களிலும் சேர்ந்து 10 சதவீதமானவர்கள் தாம் உள்ளனர் என்கிறார் சுர்ஜித். கட்சி சற்று பரவலாக இருப்பதாகச் சித்தரிப்பதற்கே ஆந்திரத்தையும், தமிழகத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளார். உண்மையில் மே.வங்கம், கேரளா, திரிபுராவில் மட்டும் 85 சதவீதத்தினர் உள்ளனர். அதிலும் ஆளும் / ஆண்ட கட்சி என்பதால்தான் பிழைப்புவாத நோக்கில் உறுப்பினர்கள் சேர்வது இம்மாநிலங்களில் அதிகமாக உள்ளது என்பது மறைக்கப்படுகின்றது.

''பரந்த இந்தி பேசும் வட இந்திய மாநிலங்களைக் கவனிப்போமானால் யதார்த்தம் இன்னும் மோசமாக இருப்பதை அறிய முடியும். இந்தப் பரந்த பிரதேசத்தில்தான் இந்திய மக்கள் தொகையில் ஒரு பெரும் பகுதி வாழுகின்றனர். இங்குள்ள ஒட்டு மொத்த மக்கள் தொகையில் ஒரு குறும் அளவினர் கூடக் கட்சி உறுப்பினர்களாக இல்லை. பீகார், சட்டிஸ்கர், டெல்லி, அரியானா, இமாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், உத்திராஞ்சல், மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய இந்தி பேசும் மாநிலங்களில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1991-இல் 30,820 ஆக இருந்து 1998-இல் 39,926 ஆக அதிகரித்தது; பிறகு 35,830 ஆக அதாவது 2.9 சதவீதம் குறைந்து விட்டது. 1978 இறுதியில் நடந்த அமைப்பு மீதான சல்கியா (மே.வங்கம்) பிளீனம் இந்தப் பிராந்தியத்தில் அமைப்பை விரிவுபடுத்துவது மற்றும் உறுதிப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை மிகவும் தூக்கலாக வைத்தது. ஆனால், பிரச்சினை இன்னமும் நீடிக்கிறது; இந்தப் பிராந்தியத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்த இயலாதவர்களாக இருக்கிறோம்.

''உத்திரப்பிரதேசம், இராசஸ்தான் மற்றும் டெல்லியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கொண்டே போகிறது; அதிலும் உ.பி. மட்டும்

ஐதராபாத் மாநாட்டில் ஜோதிபாசு, சுர்ஜித், யெச்சூரி: ''காங்கிரசை ஆட்சிபீடம் ஏற்றியே தீருவோம்'' என்று சபதமெடுக்கின்றனரோ?





படிப்பகம்

www.padippakam.com

15 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. கட்சியின் 16-வது காங்கிரசுக்குப் பிறகு பீகாரிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சரிவைக் காட்டுகிறது. இந்தி பேசும் பிற மாநிலங்களிலும் ஒரு கணிசமான அளவு வளர்ச்சியைக் காட்ட முடியவில்லை.

''மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் அதேபோன்ற பரிதாப நிலையைப் பார்க்கிறோம் என்று முதிய சி.பி.(எம்) தலைவர் சுட்டிக் காட்டினார். மக்கள்திரள் உறுப்பினர்களின் எண்ணிக்கை 16-ஆவது காங்கிரசுக்கு முன்பு 3,73,45,535-ஆக இருந்து 17-வது காங்கிரசுக்கு முன்பு 4,05,94,829 ஆக, அதாவது 8.9 சதவீத அளவு உயர்ந்தது. ஆனால் பரந்து விரிந்த இந்தி பேசும் பிராந்தியம் ஒரு கடுகளவு, 0.5 சதவீதமே அதிகரித்துக் காட்டியது. அதாவது 12,64,391-இலிருந்து 12,71,188 என்று மட்டும் உயர்ந்துள்ளது. இருப்பினும் சமீபத்திய இந்த எண்ணிக்கை கூட 14-வது காங்கிரசுக்கு முன்பு (சுமார் 12 ஆண்டுகளுக்கு மன்பு) இருந்த 12,83,564 என்பதை விடக் குறைவானது'' என்கிறார் சுர்ஜித். அதாவது இந்தி பேசும் மாநிலங்களில் தமது மக்கள் திரள் அமைப்புகளுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கையும் கூடச் சரிகிறது என்பதை சுர்ஜித் ஒப்புக் கொள்கிறார்.

அது மட்டுமல்ல, தேர்தல்களிலும் சி.பி.(எம்) கட்சியின் ஆதரவு சரிவடைந்து வருகிறது. ''கடந்த பத்தாண்டுகளில் கட்சிக்குக் கிடைத்த ஓட்டுக்களின் சதவீதமும்கூட பின்னடைவடைந்திருக்கிறது. 1967 நாடாளுமன்றத் தேர்தல்களில் 4.4 சதவீத ஓட்டுக்கள் சி.பி.(எம்) கட்சிக்குக் கிடைத்தது. அது 6.6 சதவீதம் என்று 1989-இல் உச்சபட்ச அளவை எட்டியது. ஆனால் 1999 நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல்களில் 5.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எந்த மாநிலத்திலும் சி.பி.(எம்) கட்சியின் தேர்தல் பலம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு இல்லை. மே.வங்கம், கேரளா, திரிபுரா தவிர பிற மாநிலங்களில் நமது தேர்தல் பலம் குறைந்து கொண்டே போகிறது.

மேலும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மக்கள்திரள் அமைப்புகளின் உறுப்பினர்கள் எல்லாம் சேர்த்து ஓரளவு அதிகரித்திருப்பினும், அது நமது தேர்தல் செல்வாக்கில் பிரதிபலிக்கவில்லை. உண்மையைச் சொல்வதென்றால், நமது மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கையில் பாதி அளவுக்குத்தான் கட்சி ஓட்டு வாங்கியிருக்கிறது'' என்கிறார் சுர்ஜித்.

இந்தி பேசும் மாநிலங்களில், கட்சியின் தேர்தல் ''சாதனைகள்'' குறித்துப் பின்வருமாறு தொகுக்கிறார் சுர்ஜித். ''இந்தி பேசும் மாநிலங்கள் அரசியல் கிரிமினல்மயமாவதோடு, சாதியம் மற்றும் வகுப்பு வாதம் ஆகியவற்றின் வளர்ச்சியையும் கூட கடந்த 15 ஆண்டுகளில் கண்டன. 1950-களோடு ஒப்பிடும்போது தற்போதைய நிலைமை அடிப்படையிலேயே மாறுபட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக பீகாரில் ஒப்பீட்டு ரீதியில் பலமான தளத்தையும், உ.பி.யில் ஓரளவு பலமான தளத்தையும் பெற்றிருந்தோம். அப்போது, பீகாரில் 6 அல்லது 7 எம்.பி.க்களையும் உ.பி.யில் 3 அல்லது 4 எம்.பி.க்களையும் வழக்கமாக நாம் பெறுவோம். ஆனால், இன்று நமது சொந்த பலத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் கூட வெற்றி பெற முடியாது'' என்று புலம்புகிறார்.

''சமூகப் பிரச்சினைகளைக் கையிலெடுத்துச் சமூக சீர்திருத்த இயக்கங்களைக் கடுமையானதொரு வழியில் கட்டவிழ்த்து விட்டால் தற்போதைய தேக்க நிலையைத் தகர்க்கலாம் என்றும் ஆந்திராவும் தமிழ்நாடும் எடுத்துக் காட்டியுள்ளன'' என்கிறார், சுர்ஜித். ஆனால், ஆந்திரா, தமிழ்நாட்டில் சி.பி.(எம்) கட்சி சமூகப் பிரச்சினைகளைக் கையிலெடுத்து, சமூக சீர்திருத்த இயக்கங்களைக் கட்டவிழ்த்து விட்டதாகக் கூறுவதும் உண்மையல்ல. இங்கும் அரசியல் கிரிமினல்மயவாதம், சாதியம் மற்றும் வகுப்புவாத சக்திகள் வளர்வதும் நடக்கிறது. ஏற்கனவே, ஓரளவு தேர்தல் செல்வாக்குப் பெற்றிருந்த கோவை, மதுரை, திருச்சி, கீழத்தஞ்சையிலும் தேய்ந்துபோய் விட்டது. அக்கட்சி ஆளும் / ஆண்ட மூன்று மாநிலங்கள் தவிர, பிற மாநிலங்கள் எதிலும் ஒரு தொகுதியில் கூட சி.பி.(எம்) கட்சி தனது சொந்த பலத்தில் வெற்றி பெற முடியாது என்பதுதான் உண்மை.

> ''உத்திரபிரதேசம், இராசஸ்தான் மற்றும் தில்லியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து கொண்டே போகிறது; அதிலும் உ.பி.யில் மட்டும் 15 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. கட்சியின் 16–ஆவது காங்கிரசுக்குப் பிறகு பீகாரிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சரிவைக் காட்டுகிறது'' என்று ஒப்பாரி வைத்துள்ளார் சுர்ஜித்.

சி.பி.(எம்) கட்சியின் இந்தப் பரிதாப நிலைமைக்கான காரணங்களைப் பின்வருமாறு சுர்ஜித் தொகுக்கிறார். ''கட்சியின் அமைப்பு மற்றும் செயல்பாட்டில் உள்ள பல்வேறு பலவீனங்களின் இந்த நிலைமை நமது கவனத்தை ஈர்க்கிறது. எடுத்துக்காட்டாக, கடந்த 37 ஆண்டுகளில் ஏராளமான கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நாம் தலைமையேற்று நடத்தியிருக்கிறோம்; என்ற போதிலும் கட்சி அல்லது மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர்கள் அனைவரையுமோ, கணிசமான அளவோ இவற்றுக்கு அணிதிரட்ட இயலவில்லை என்கிற உண்மை நீடிக்கிறது. சில மாநிலங்களில், தேர்தல் இயக்கம் போன்ற முக்கியமான செயல்பாடுகளின் போதுகூட கட்சி உறுப்பினர்களில் ஒரு பிரிவு செயல்படாமல் உள்ளனர். சில சமயம் ஒட்டுமொத்தக் கிளைகளையே செயலிழந்திருக்கக் காண்கிறோம்.''

''மேலும், நமது மக்கள் திரள் அமைப்புகளில் ஒரு பெரும்பிரிவும் நமது கட்சியின் நிலைப்பாடுகளை ஏற்பதில்லை. தமது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக இந்த அமைப்புகள் போராடுகின்றன என்கிற உணர்வு காரணமாகத்தான் இவற்றில் இருக்கின்றனர். எப்படியோ, நமது கட்சியின் பிரச்சார இயக்கங்கள் மற்றும் கிளர்ச்சிகளில் பங்கேற்பதை விட்டுத் தள்ளுங்கள், அவர்கள் நமது கட்சிக்கு ஓட்டுப் போடுவதுகூட கிடையாது. காரணமென்னவென்றால், இந்தப் பிரிவினரை அரசியல் ரீதியில் போதித்து கட்சியின் உறுப்பினர்களாகவோ, அனுதாபிகளாகவோ அவர்களை மாற்றுவதில் பல இடங்களில் நாம் தவறியிருக்கிறோம். இந்தப் பொருளாதாரவாதம் எங்கேயும் இட்டுச் செல்லாது'' என்று சுர்ஜித் எச்சரிக்கிறார்.

கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சித்தாந்த போதனை இல்லாமல் இருப்பது, அதன் விளைவாக அவரவர் பகுதிகளில் மார்க்சிய - லெனினியத்தைப் பருண்மையான நிலைமைகளுக்குத் தகுந்தவாறு பொருத்துவதற்கு இயலாமை, மக்கள் திரள் அமைப்புகளில் ஜனநாயக முறைகளில் இயங்குவதில் உள்ள குறைபாடு, ஜனநாயக மத்தியத்துவ நடைமுறையை மீறிய, அல்லது திசைதிரும்பிய கட்சி நடைமுறை, நாடாளுமன்றவாதத்தின் துருப்பிடிக்கும் செல்வாக்கு போன்றவை கட்சி தொடர்ந்து பலவீனப்பட்டு வருவதற்கான காரணங்கள் ஆகும்'' என்று சுர்ஜித் தொகுக்கிறார்.

ஆனால், சி.பி.(எம்) கட்சியைப் பொறுத்தவரை இவை ஒன்றும் புதிதல்ல. கடந்த 30 ஆண்டுகளாக ஒவ்வொரு காங்கிரசுகளிலும் வாசிக்கப்படும் அரசியல் - அமைப்பு அறிக்கையிலும் இவை கூறப்படுகின்றன. இந்தப் பலவீனங்களைக் களைவதற்கான தீர்வுகளும் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன. அணிகளுக்கு அரசியல் - சித்தாந்த போதனையளிப்பது, ஜனநாயக மத்தியத்துவ அமைப்பு முறையைப் பின்பற்றுவது, பொருளாதாரவாதம் மற்றும் நாடாளுமன்றவாதத்தை எதிர்த்து முறியடிப்பது என்று சபதமேற்கப்படுகின்றது. ஆனால், சி.பி.(எம்) இந்தக் குறைபாடுகளை களையவே முடியாதவாறு கிழடு தட்டிப் போனதுதான் கண்ட பலனாக உள்ளது.

— தொடரும்


படிப்பகம்

**நேபாளம்:**

# இமயத்தில் உயரும் செங்கொடி
# அரசு பயங்கரவாதிகளுக்குப் பேரிடி

''ஐயோ! பயங்கரவாதம்!'' என்று அலறினார், நேபாளப் பிரதமர் தியோபா. ''இதை இனிமேலும் அனுமதிக்க முடியாது; ஜனநாயகத்தை வீழ்த்தி அது வெற்றி பெறுவதைச் சகித்துக் கொள்ளவும் முடியாது'' என்று சூளுரைத்தார். அடுத்த தாக்குதல் எப்போது நடக்குமோ என்று பீதியில் நடுங்கிக் கொண்டிருந்த அமைச்சர்கள், பிரதமர் தலைமையில் கூடி, நாடெங்கும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினர்.

'நேபாள மாவோயிஸ்டுகள், ஆப்கானின் அல்-கொய்தா பயங்கரவாதிகளைப் போன்றவர்கள்; இப்பயங்கரவாதத்தை ஒடுக்க நாங்கள் எல்லா உதவிகளையும் செய்வோம்'' என்றார், அமெரிக்கத் தூதர் மிச்சேல் மலினோஸ்வி.

''இது மிகக் கொடூரமான பயங்கரவாதம். கடந்த 35 ஆண்டுகளாக இத்தகைய பயங்கரவாதத்தை நாங்கள் வடக்கு அயர்லாந்தில் எதிர்கொண்டு வருகிறோம். பயங்கரவாதம் உலகின் பெரிய அச்சுறுத்தலாகி விட்டது. அதை ஒடுக்க நாங்கள் எல்லா உதவிகளையும் செய்வோம்'' என்றார் பிரிட்டனின் தெற்காசிய விவகார அரசுத்துறை இணைச் செயலாளர் பென் பிராட்ஷா.

''பயங்கரவாதத்தை ஒடுக்க நாங்கள் நேபாளத்துடன் ஒத்துழைப்போம். சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்வோம்'' என்று உறுதியளித்தார், இந்திய இராணுவத் தலைமைத் தளபதியான ஜெனரல் பத்மநாபன்.

நேபாள ஆட்சியாளர்களாலும், அமெரிக்க - பிரிட்டிஷ் வல்லரசுகளாலும், இந்திய மேலாதிக்கவாதிகளாலும் குற்றம் சாட்டப்படும் 'பயங்கரவாதிகள்' யார்?

இவர்கள் கம்யூனிசப் புரட்சியாளர்கள். இவர்கள் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்)யினர். பின்தங்கியுள்ள - வறுமைப் படுகுழியில் தத்தளிக்கும் நேபாள விவசாயிகளை அணிதிரட்டி நிலத்திற்காகவும் அரசியல் அதிகாரத்திற்காகவும் போராடி வருபவர்கள். பிற்போக்கு மன்னராட்சி முறையையும், பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சி முறையையும் தகர்த்தெறிந்துவிட்டு மக்கள் ஜனநாயகத்தை நிறுவ ஆயுதமேந்திப் போராடி வருபவர்கள். இவர்களைத்தான் 'பயங்கரவாதிகள்' என்று நேபாள ஆட்சியாளர்களும் இந்திய, அமெரிக்க மேலாதிக்கவாதிகளும் குற்றம் சாட்டுகின்றனர்.

***

அண்டை நாடான நேபாளத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த மன்னராட்சி கொடுமையை எதிர்த்து 1990-இல் நடந்த ஜனநாயகத்துக்கான மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து, பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சிமுறை வந்தது. உண்மையில் மன்னரிடமே வரம்பற்ற அதிகாரம் குவிக்கப்பட்டிருந்தது. மக்களின் போராட்ட வெள்ளம் எல்லை மீறிச் சென்று விடாமல் வடிகால் வெட்டும் உத்தியாகவே, இப்போலி ஜனநாயக நாடாளுமன்ற ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. ஆனாலும் ஓட்டுக்கட்சிகளின் பதவிச் சண்டை, கட்சித் தாவல், கழுத்தறுப்புகள், ஆட்சிக் கலைப்பு என்று 12 ஆண்டுகளில் 12 முறை அரசாங்கங்கள் மாறும் அளவுக்கு நாடாளுமன்ற அராஜகம் தலைவிரித்தாடி, இப்போலி ஜனநாயகம் முற்றாக அம்பலப்பட்டுப் போயுள்ளது.

இந்நிலையில் மாவோயிஸ்டுகள் தமது செல்வாக்குள்ள நேபாளத்தின் மேற்கு பிராந்தியத்தில் விவசாயிகளை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினர். ஆளும் நேபாள காங்கிரசு அரசு போலீசுப் படையையும் சிறப்பு அதிரடிப் படைகளையும் ஏவி போராளிகளை நரவேட்டையாடி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இழப்புகளும் பின்னடை

**மாவோயிஸ்டுகளின் பொதுக்கூட்டத்தில், ''ஆயுதம் ஏந்துவோம்! அதிகாரத்தை நிலைநாட்டுவோம்!'' என்று மக்களை அறைகூவி அழைக்கும் வீராங்கனை.**



www.padippakam.com

வுகளும் ஏற்பட்ட போதிலும் மாவோயிஸ்டுகள் உறுதியாக நின்று எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்தனர். மேற்கு மாவட்டங்கள் எங்கும் செங்கொடி உயர்ந்தது.

இதனால் பீதியடைந்த ஆட்சியாளர்கள், போலீசு - இராணுவப் படைகளை வலுப்படுத்திக் கொண்டு அடுத்த தாக்குதலை நடத்த கால அவகாசம் பெறும் நோக்கத்தோடு போர் நிறுத்தத்தை அறிவித்து, பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண விழைவதாக நாடகமாடினர். நேபாளத்தில் அரச குடும்பத்தில் நடந்த அரண்மனை கொலைகளுக்குப் பின்னர், ஜூலை 2001-லிருந்து 4 மாத காலத்திற்கு இப்போர் நிறுத்தம் நீடித்தது. மாவோயிஸ்டுகளுடன் அரசு 3 சுற்று பேச்சு வார்த்தை நடத்தியது.



புரட்சிகர வீரசாகசம்: மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் பலியான அரச பயங்கரவாதப் படையினர்.

''மன்னராட்சி முறையை ஒழித்துக் கட்டு; சட்டபூர்வ அதிகாரத்தைக் கொண்ட நாடாளுமன்றத்தை நிறுவு; மாவோயிஸ்டுகளும் பங்கேற்கும் இடைக்கால அரசை அமை! இந்த அரசின் மூலம் நிலச்சீர்திருத்தத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டு!'' - ஆகிய மையமான கோரிக்கைகளை மாவோயிஸ்டுகள் முன்வைத்தனர்.

இதுதவிர, இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களுக்கு இசைவாகப் போடப்பட்ட 1950-ஆம் ஆண்டின் இந்திய - நேபாள ஒப்பந்தம், 1996-ன் மாகாலி ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்துத் துரோக ஒப்பந்தங்களை ரத்து செய்தல், எந்தவொரு அந்நிய நாட்டுக்கும் அடிபணியாமல் சுயசார்பான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்தல், கல்வி - கலாச்சாரம், மக்கள் நலன் முதலானவற்றைக் கொண்ட மாற்று அரசியல் - பொருளாதார தேசிய திட்டத்தையும் முன் வைத்தனர்.

இவற்றை ஏற்க மறுத்து தற்போதைய போலி ஜனநாயக அரசியலமைப்பு முறையை ஆட்சியாளர்கள் ஆதரித்து நின்றதால், பேச்சு வார்த்தை முறிந்தது. அதைத் தொடர்ந்து நாடெங்கும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்திய ஆட்சியாளர்கள், மன்னர் பொறுப்பில் உள்ள நேபாள அரசப் படைகளை மாவோயிஸ்டுகள் மீது ஏவினர்.

இத்தகைய நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்த மாவோயிஸ்டுகள் கடந்த ஆண்டு நவம்பரில் லகாமி இராணுவ முகாமையும், டாங் மாவட்டத் தலைமை அலுவலகத்தையும் பெருந்திரளாக வந்து தாக்கினர். இத்தாக்குதலில் உயர் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டு அரசப் படையினர் 26 பேர் பலியாகினர். அதைத் தொடர்ந்து இவ்வாண்டு பிப்ரவரியில் மங்கல்சென் இராணுவ முகாமையும், அக்ஹாம் மாவட்டத்திலுள்ள விமான தளத்தையும் மாவோயிஸ்டுகள் தாக்கியதில் 58 பேர் கொண்ட ஒரு அரசப் படையணியில் 55 பேர் பலியாகினர். இது தவிர 77 போலீசுப் படையினர் மாண்டு போயினர். இப்படியொரு தாக்குதல் இதுவரை நடந்ததேயில்லை என்று ஆட்சியாளர்கள் பீதியில் நடுநடுங்கினர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவி, சந்தேகப்படும் ஒவ்வொருவரையும் சிறையிலடைத்து வதைத்தனர். மாவோயிஸ்டு ஒழிப்பு வேட்டை என்ற பெயரில் கேள்விமுறையற்ற அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பத்திரிகையாளர்களும் மனித உரிமை அமைப்பினரும் வரைமுறையின்றிக் கைது செய்யப்பட்டனர்.

இதை எதிர்த்துப் போராடி வந்த மாவோயிஸ்டுகள் கடந்த மே 7-ஆம் நாளன்று நேபாளத்தின் மத்திய - மேற்கு பிராந்தியத்திலுள்ள ''காம்'' எனுமிடத்தில் மிகப் பெரிய தாக்குதலை நடத்தினர். இதில் அரசு பயங்கரவாதப் படையினர் 75 பேர் கொல்லப்பட்டனர். இப்பகுதியிலிருந்த இராணுவ முகாமும் சூறையாடப்பட்டது.

இத்தாக்குதலைக் கண்டு பீதியடைந்த ஆட்சியாளர்கள் அண்டை நாடுகளான இந்தியா மற்றும் சீனாவிடமும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமும் உதவி கேட்டு ஓடினர். எல்லா உதவிகளையும் செய்வதாக வாக்களித்த இந்திய ஆட்சியாளர்கள், உடனடியாக இந்திய இராணுவத் தலைமைத் தளபதி பத்மநாபனை நேபாளத்துக்கு அனுப்பி வைத்தனர். அவர் நேபாள அரச படைத் தளபதிகளுடன் விவாதித்து, போராளிகளை ஒடுக்க போர் உத்திகளை வகுத்துக் கொடுத்துள்ளதோடு, இரு ஹெலிகாப்டர்கள் மற்றும் இராணுவத் தளவாடங்களைக் கொடுத்து உதவியுள்ளார். இந்த பயங்கரவாத சேவைக்காக நேபாள மன்னர், பத்மநாபனுக்கு தங்கமுலாமிட்ட வீரவாள் பரிசளித்து கௌரவித்துள்ளார்.

கம்யூனிசப் புரட்சியாளர்களை ஒடுக்க இந்திய அரசு இந்த உதவிகளோடு மட்டும் நின்றுவிடவில்லை. கடந்த ஜூலையில் பத்திரிக்கையாளர்களும், மனித உரிமை அமைப்பினர் மற்றும் அறிவுத்துறையினர் டெல்லியில் கூடி நேபாளத்தில் ஜனநாயகத்தை மீட்க என்ன செய்ய வேண்டும் என்று கருத்தரங்கம் நடத்தி விவாதிக்க முயன்றபோது, பா.ஜ.க. அரசு இக்கூட்டத்தைத் தடை செய்து பத்திரிகை ஆசிரியர் உள்ளிட்டுப் பலரையும் கைது செய்துள்ளது. பா.ஜ.க.வுக்குப் போட்டியாக தமிழகத்தில் பாசிச ஜெயா கும்பல், அனைந்திந்திய நேபாளிகள் ஐக்கிய சங்கத்தை பொடா சட்டத்தின் கீழ் தடை செய்து, அச்சங்க நிர்வாகிகளை உள்வுப் படையினரைக் கொண்டு அச்சுறுத்தி, விசாரணை என்ற பெயரில் வதைத்து வருகிறது.

ஈழத்தில் இராணுவத் தலையீடு செய்ய மாட்டோம் என்று கூறிவிட்டதால், வாஜ்பாய் அரசுக்கு தந்திர உத்தி அடிப்படையில் ஆதரவளித்துக் கொண்டு தமிழின பிழைப்புவாதிகள் வேண்டுமானால் தங்களையும் அணிகளையும் ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால், உள்நாட்டில் மட்டுமின்றி, அண்டை நாடுகளிலும் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்கள் வெற்றிபெற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று வட்டார மேலாதிக்க வெறியோடு இந்திய அரசு, நேபாள பாசிச ஆட்சியாளர்களுக்கு உற்ற துணையாக நின்று கொண்டிருக்கிறது. அன்றைய ஜாரிச ரசியா ஐரோப்பாவின் பிற்போக்கு - எதிர்ப்புரட்சி கோட்டையாகத் திகழ்ந்ததைப் போலவே, இன்று தெற்காசியாவின் பிற்போக்கு - எதிர்ப்புரட்சியின் கோட்டையாக இந்தியா உள்ளது என்பதையும், இதைத் தனிமைப்படுத்தி வீழ்த்தாமல் தெற்காசிய வட்டகையில் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்கள் வெற்றிபெற முடியாது என்பதையும் நேபாள விவகாரங்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

***

நேபாளத்தில் பெயரளவிலான நாடாளுமன்ற ஜனநாயகம் கூட நீடிக்க முடியாத படி அரசியல் நெருக்கடி முற்றி விட்டது. ஏனெனில், நேபாள ஆளும் காங்கிரசுக் கட்சியே குழுச் சண்டையால் பிளவுபட்டுக் கிடக்கிறது. ஒன்றுபட்ட கட்சியாகக் காட்டிக் கொண்டாலும் உண்மையில் அது நெல்லிக்காய் மூட்டை போலத்தான் உள்ளது.

கடந்த ஆண்டில் நேபாள காங்கிரசு தலைவரான கிரிஜா பிரசாத் கொய்ராலா,


படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடியிலிருந்து மீள வழி தெரியாமல் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். அவருக்குப் பின் பதவியேற்ற பிரதமர் தியோபா, நெருக்கடியைத் தீர்க்க முடியாமல் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு மன்னரிடம் கோரினார். அதன்படியே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தற்போதைய அமைச்சரவையை பொறுப்பு அரசாக நீடிக்குமாறு மன்னர் உத்தரவிட்டார். ஆனால், மாவோயிசப் புரட்சியாளர்களின் தாக்கு தலைக் காட்டி, தேர்தலை நடத்தாமல் பிரதமர் தியோபா நாடெங்கும் அவசர நிலையைப் பிறப்பித்தார். இதனால் எந்தவொரு அரசியல் கட்சியும் செயல்பட முடியாதபடி நெருக்கடி முற்றியது. மன்னரும் தியோபாவும் கூட்டுச் சேர்ந்து சதி செய்வதாகக் குற்றம் சாட்டிய நேபாள காங்கிரசுத் தலைவர் கொய்ராலா, தியோபாவை கட்சியிலிருந்தே நீக்கி விட்டதாக அறிவித்தார்.

கட்சி சாராத - பொறுப்பு பிரதமராக உள்ள தியோபா, அவசர நிலையை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டித்து விட்டு, இப்போது தேர்தலை விரைவில் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். பாகிஸ்தானில் இராணுவ சர்வாதிகாரி முஷாரப் அண்மையில் நடத்திய மோசடித் தேர்தலைப் போலவே, அவசரநிலை அடக்குமுறையின்கீழ் இராணுவத்தின் பொறுப்பில் மோசடித் தேர்தல் நடத்தும் சதித் திட்டமே இது என்று நேபாள காங்கிரசின் ஒரு பிரிவினரே அம்பலப்படுத்துகின்றனர். மேலும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பிறகு 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசாங்கம் பொறுப்பேற்காவிட்டால், மன்னர் தனது நேரடி அதிகாரத்துடன் ஆட்சி செய்யலாம் என்று நேபாள அரசியல் சாசனம் மன்னராட்சி கொடுங்கோன்மைக்கு வழிவகை செய்கிறது. இப்படியொரு விபரீத விளைவு ஏற்பட்டு விடுமோ என்று ஓட்டுக் கட்சிகள் திகைத்து நிற்கின்றன.

அவசர நிலை அடக்குமுறையை நீக்கி விட்டு தேர்தல் நடத்து! மாவோயிஸ்டுகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தையை நடத்து! என்று சில ஜனநாயக சக்திகளும் அறிவுத்துறையினரும் நேபாளத்தில் குரலெழுப்புகின்றனர். ஆனால், பிரதமர் தியோபா பயங்கரவாதப் பீதியூட்டி இவற்றை ஏற்க முடியாது என்று பிடிவாதமாக நிற்கிறார். அவசரநிலை பாசிசத்தின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டால் அது பெயரளவிற்குக் கூட சுதந்திரமான - ஜனநாயகத் தேர்தலாக இருக்காது; தேர்தல் நடத்தாவிட்டால் மன்னராட்சியை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் எழும்; மறுபுறம், தொடர்ந்து பயங்கரவாத பீதியூட்டி வந்தால், அதைச் சாக்காக வைத்து அமெரிக்கா அல்லது இந்திய மேலாதிக்கவாதிகள் நேபாளத்தில் நேரடியாகத் தலையீடு செய்யும் பேரபாயம் ஏற்படும். என்ன செய்வது என்று புரியாமல் நேபாளம் தீராத அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

இந்நெருக்கடிகளிலிருந்து நேபாளத்தை மீட்க மாவோயிஸ்டுகள் மாற்று அரசியல் - பொருளாதாரத் திட்டத்தை முன் வைத்துள்ள போதிலும், அதற்கான பிரச்சாரம், கிளர்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் இன்னமும் பலவீனமான நிலையிலேயே உள்ளனர். கட்சியின் முழக்கங்களை தமது சொந்த முழக்கங்களாக பரந்துபட்ட மக்கள் அனுபவரீதியாக உணர்ந்து ஏற்றுக் கொண்டு போராடுவதற்கு, அவர்களை அரசியல்ரீதியாகப் பயிற்றுவிப்பதற்கு, அரசியல் அம்பலப்படுத்தல்களும் அரசியல் கிளர்ச்சிகளும் அவசியமான நிபந்தனையாகும். இப்புரட்சிகர கடமையைச் சாதிப்பதில் மாவோயிஸ்டுகள் இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளனர்.



இந்திய இராணுவத் தளபதி பத்மநாபனின் பயங்கரவாத சேவையைப் பாராட்டி வீரவாள் பரிசளித்து கௌரவிக்கும் நேபாள மன்னர்.

குறிப்பாக, மக்களை அரசியல்படுத்தி போராட்டப் பாதையில் பயிற்றுவிப்பதோடு, போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தி, அதன் புரட்சிகர பிரிவை வென்றெடுக்க வேண்டியுள்ளது. நேபாள காங்கிரசு கட்சியில் உள்ள முற்போக்கு - ஜனநாயகப் பிரிவை ஈர்த்து, சமரச சக்திகளைத் தனிமைப்படுத்த வேண்டியுள்ளது. இதை நீடித்த அரசியல் பிரச்சாரம் - கிளர்ச்சிகள் மூலமே சாதிக்க முடியும். எவ்வளவுதான் ஆயுத ரீதியான தாக்குதல்களை எதிரிக்கு எதிராகத் தொடுத்தாலும், வீரசாகசப் போர்களை நடத்தினாலும் இடைநிலைச் சக்திகளை வென்றெடுக்காமல் புரட்சியைச் சாதிக்கவும் முடியாது.

மேலும், உலக மேலாதிக்க நோக்கத்துடன் அமெரிக்க வல்லரசு பயங்கரவாத பீதியூட்டி பல நாடுகளில் ஆக்கிரமிப்புப் போர்களை நடத்திவரும் வேளையில், குறிப்பாக தெற்காசியப் பிராந்தியத்தைத் தனது காலடியில் கொண்டுவரத் துடிக்கும் நிலையில், அதற்கு இந்தியா அடியாளாகச் செயல்பட்டு வரும் சூழலில், நேபாள புரட்சியாளர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி தெற்காசிய வட்டகையில் தமது புரட்சிகர போராட்டத்துக்கு பரந்து விரிந்த ஆதரவைத் திரட்ட வேண்டியுள்ளது. பிராந்திய வல்லரசான இந்தியாவையும் அமெரிக்க மேலாதிக்க வல்லரசையும் எதிர்த்து தெற்காசிய புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் ஒன்றிணைந்த போராட்டமும் இன்று அவசர அவசியமாகியுள்ளது. இத்தகைய விரிந்த பார்வையுடன் ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைப்பதிலும் அரசியல் போராட்டங்களை நடத்துவதிலும் மாவோயிஸ்டுகள் ஆரம்ப முயற்சியிலேயே உள்ளனர்.

இதனால்தான் அவசர நிலை பாசிசத்தை எதிர்த்த அரசியல் கிளர்ச்சிகள், இந்திய இராணுவத் தளபதி பத்மநாபனின் வருகையை எதிர்த்த ஆர்ப்பாட்டம், அமெரிக்க - பிரிட்டிஷ் தூதர்கள், ஆலோசகர்களுக்கு எதிரான போராட்டம் என எதையுமே மாவோயிஸ்டுகளால் நடத்த இயலவில்லை. அவசரநிலை பாசிச அடக்குமுறை நிலவிய போதிலும் தமது செல்வாக்குள்ள பகுதிகளில் கூட இத்தகைய அரசியல் போராட்டங்களைக் கட்டியமைக்காமல் இருப்பது, அவர்களின் அரசியல் பலவீனத்தையே காட்டுகிறது. சுருக்கமாகச் சொன்னால், செம்படையைக் கட்டியமைத்து அரசு பயங்கரவாதிகளை நிலை குலையச் செய்து வீரசாகசப் போர்களில் முன்னேறிய போதிலும், மாவோயிஸ்டுகள் வலுவான அரசியல் படையை இன்னமும் கட்டியமைக்கவில்லை. பரந்துவிரிந்த ஐக்கிய முன்னணியை நிறுவி வளர்க்கவுமில்லை. இவற்றில் அவர்கள் இன்னமும் தொடக்க நிலையிலேயே உள்ளனர்.

எவ்வாறாயினும் கம்யூனிசப் புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகளைப் புறக்கணித்துவிட்டு, நேபாளத்தில் ஜனநாயகம் மலரவோ, மக்கள் வாழ்வில் வசந்தம் ஏற்படவோ சாத்தியமேயில்லை. நேபாளத்தின் எதிர்காலம் மாவோயிஸ்டுகளின் கைகளில்தான் உள்ளது. தமது குறைகள் - பலவீனங்களைக் களைந்து கொண்டு புரட்சியாளர்கள் விரைவில் முன்னேறுவார்கள். அது நேபாளம் மட்டுமின்றி, தெற்காசியா முழுவதும் புரட்சியின் இடிமுழக்கமாக எதிரொலிக்கும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் கடிதம்

✸ ஆளும் வர்க்கக் கட்சிகளும் 'தேசிய' பத்திரிகைகளும் அரசுத் தலைவர் தேர்தலில் ''ஏவுகணை மனிதர்'' அப்துல் கலாமை ஆதரித்து நின்ற வேளையில், இந்து மதவெறி கும்பலுக்குக் கிடைத்த மற்றொரு முகமூடிதான் கலாம் அய்யர் என்று அம்பலப்படுத்திக் காட்டிய அட்டைபடக் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. இந்தியா, பாகிஸ்தான் - ஆகிய இரு நாட்டு ஆட்சியாளர்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்கள்தான் என்பதை எடுத்துரைத்தது அருமை. இந்துவெறியர்களின் காலை நக்கும் போலி கம்யூனிஸ்டுகளைத் தோலுரித்துக் காட்டிய ''ஓம் சக்தியும் ஜன சக்தியும்'' எடுப்பாக அமைந்திருந்தது.

**- சிவா,**
**மானாமதுரை.**

✸ ''கொல்லைப் புறத்தில் கெஞ்சல்; எல்லைப்புறத்தில் கூச்சல்'' என்ற கட்டுரையானது, ஆளும் இந்துவெறி பாசிச சக்திகளது தேசபக்தியின் தரத்தை எடைபோட்டுக் காட்டுவதோடு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு இலட்சியத்துக்கு நாட்டைக் காவு கொடுத்து வரும் உண்மையை நிரூபித்துக் காட்டுகிறது.

**- வழிப்போக்கன்,**
**உடுமலைப்பேட்டை.**

✸ நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)யில் கடந்த 20 வருடங்களாக இருந்து வருகிறேன். உங்கள் புதிய ஜனநாயகத்தை ஒரு வருடமாக தொடர்ந்து படித்து வருகிறேன். இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் தலைமையில் புரட்சி நடக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு, உங்கள் பத்திரிகை புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

**- எம். ஜெயகாந்தன்,**
**வெள்ளமடை, கோவை.**

✸ காவிரியில் தண்ணீரைத் திறந்து விடக் கூடாது என்று கர்நாடகம் ஒருபுறம் பிடிவாதம் செய்ய, மறுபுறம் தண்ணீர் வந்து விட்டால் நெல் கொள்முதல் செய்ய மறுக்கும் ஜெயா என்று இருபெரும் எதிரிகளைத் தமிழக விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர். நீதிமன்ற வழக்கு தொடுப்பதன் மூலம் தமிழக விவசாயிகளின் கோபத்திலிருந்து தப்பிவிடலாம் என்று ஜெயா தப்புக் கணக்கு போடுகிறார். இந்த உண்மைகளைத் தலையங்கம் எடுப்பாக உணர்த்தியது. அரசுத் தலைவராகும் ஆர்.எஸ்.எஸ். விசுவாசி அப்துல் கலாமின் உண்மை முகத்தையும், அரசுத் தலைவர் பதவி என்பது அதிகாரமில்லாத அலங்கார நாற்காலிதான் என்பதையும் அம்பலப்படுத்தியது சிறப்பு. ஏகாதிபத்திய வல்லரசான ஜப்பான்கூட உலகமயமாக்கலின் கீழ் பொருளாதாரப் புதை குழியில் சிக்கித் தவிப்பது வியப்பை ஏற்படுத்தியது. பயங்கரவாதி புஷ்-க்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்களும் அவற்றின் வழிமுறைகளும் எங்கள் ஊரிலுள்ள புரட்சிகர அமைப்புகள் நடத்தும் போராட்டங்கள் போலவே உள்ளன.

**- தர்மராஜ்,**
**திருச்சி.**

✸ காவிரி நீர் பிரச்சினை, விவசாயத்தில் தாராளமயத்தைப் புகுத்தும் புதிய ஆயுதமாக மாறிவிட்டதையும் இரு மாநில ஆட்சியாளர்களின் துரோகத்தையும் பிழைப்புவாதத்தையும் எடுப்பாக விளக்கியது. அரசுத் தலைவராகும் கலாம் அய்யரைத் தோலுரித்துக் காட்டியது அருமை. ''கின்லே''யின் பகற்கொள்ளையை அறிந்தபோது, அதற்கெதிராகப் போராடவேண்டும் என்ற உணர்வு பிறந்தது. ஓம்சக்தியும், ஜனசக்தியும் என்ற கட்டுரை வர்க்க உணர்வோடு எள்ளல் நடையில் வலது கம்யூனிஸ்டுகளின் துரோகத்தை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது.

**- வாசகர் வட்டம்,**
**கோவை.**

✸ ஜூலை இதழின் முகப்பு சித்திரமும், அவற்றின் வண்ணமும் கருத்தாழமிக்கதாக அமைந்திருந்தது. அரசுத் தலைரவாக கலாம் அய்யர் எனும் தலையாட்டி பொம்மையை இந்துவெறி ஆட்சியாளர்கள் தேர்வு செய்துள்ளதன் நோக்கத்தைச் சிறப்புக் கட்டுரை எடுப்பாக படம் பிடித்துக் காட்டியது. எளிமையான நடையுடன் அமைந்துள்ள இக்கட்டுரை மிக அருமை.

**- வேல். தினகரன்,**
**திருச்சி.**

✸ அனைத்துக் கட்டுரைகளும் சிறப்பாக இருந்தன. சென்ற இதழ் புதிய ஜனநாயகத்தில் பாண்டிச்சேரியில் நடந்த ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பில் போலி கம்யூனிஸ்டுகள் கலகம் செய்தார்கள் என வந்தபோது, பரவாயில்லையே என நினைக்க வைத்தது. ஆனால், 'ஓம் சக்தியும் ஜனசக்தியும்' அவர்களின் முகத்திரையைக் கிழித்து விட்டது. அனைத்திந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் முழக்கத் தட்டியில், ''இருக்கும்வரை ரத்த தானம்; இறந்த பின் கண்தானம்'' என எழுதி வைத்துள்ளனர். இவர்களை கம்யூனிஸ்டு எனச் சொல்லவே வெட்கமாக உள்ளது.

**- வாசகர் வட்டம்,**
**திருச்சி.**

## புரட்சியாளர்களின் விவேகம் போலிகளின் சமரசம்

விவசாயிகள் விடுதலை முன்னணியில் செயல்பட்டு வரும் தோழர் மணிமாறன் - மாலதி திருமணம், 29.6.2002 அன்று சங்கராபுரம் வட்டத்திலுள்ள தேவபாண்டலத்தில் பார்ப்பனச் சடங்குகள், சம்பிரதாயங்கள் எதுவும் இன்றி சீர்திருத்த முறையில் நடந்தது. இத்திருமணத்திற்கு வந்திருந்த மணமக்களின் உறவினர்கள், நண்பர்களிடம் புதிய ஜனநாயகம் மற்றும் புதிய கலாச்சாரம் பத்திரிகைகளுக்கு சந்தா கொடுத்து உதவுமாறு வி.வி.மு தோழர்கள் கூறினர். இப்பிரச்சாரத்தின் மூலம் இத்திருமணத்தில், புதிய ஜனநாயகத்திற்கு 44 சந்தாக்கள் சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

பல்வேறு ஓட்டுக் கட்சிகளின் / தமிழினக் குழுக்களின் உறுப்பினர்கள் / ஆதரவாளர்களின் திருமண விழாக்களில், அமைப்பு பத்திரிகைகளுக்கு வளர்ச்சி நிதி வழங்கப்படுவது வாடிக்கையானதுதான். வி.வி.மு. தோழர்கள், அதுபோல பொத்தாம்பொதுவாக ''வளர்ச்சி நிதி'' என்ற பெயரில் நன்கொடை பெறாமல், சந்தா சேகரித்ததன் மூலம், பு.ஜ.வின் வளர்ச்சிக்கு உதவியதோடு மட்டுமின்றி, அதன் புரட்சிகர அரசியல் கருத்துகள் பலரிடம் சென்றடையும் வண்ணம், முன்னுதாரணமிக்க முறையில், அரசியல் முன்முயற்சியோடு செயல்பட்டும் இருக்கிறார்கள்.

வி.வி.மு. உழைக்கும் மக்கள் மத்தியில் புரட்சிகர கருத்துக்களைக் கொண்டு செல்ல இப்படி பாடுபட்டால், வலது கம்யூனிஸ்டு கட்சியோ தனது அணிகளிடம் உள்ள பிற்போக்குத்தனத்தைக் கூட எதிர்த்துப் போராடாமல், அதற்கு வால்பிடிக்கிறது.

''கோவை காந்திபுரம் கம்யூனிஸ்ட் கட்சி ஆறுமுக்கு கிளையின் உறுப்பினர் ஆர்.வனிதா அவர்களின் மகள் ஆர்த்தியின் பூப்பு நன்னீராட்டு விழாவின் போது, வலதுகளின் அரசியல் ஏடான ஜனசக்திக்கு ரூ. 101/- வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டதாக'' ஜனசக்தி (21.07.2002) இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பருவமடையும் பெண்களுக்கு நடத்தப்படும் பூப்பு நன்னீராட்டு விழா என்பது நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க பிற்போக்கு பண்பாடு. இதை எதிர்த்துப் போராடாத வலது கம்யூனிஸ்ட் கட்சி, சம்பிரதாயமாக ஒற்றை இலக்க முறையில் ரூ. 101-ஐ வாங்கி கல்லாப் பெட்டியில் போட்டுக் கொண்டு, ஜனசக்தியின் சார்பில் வாழ்த்தும் தெரிவித்திருக்கிறது. இது வெட்கக்கேடானதில்லையா எனக் குத்திக் காட்டினால், ''நாய் விற்ற காசு குரைக்காது'' எனப் பதில் அளிப்பார்களோ?

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் பெண் நடுத்தெருவில் போலீசாரால் ஏன் மிருகத்தனமாகத் தாக்கப்படுகிறார்? இந்த தாக்குதலைப் பத்திரிகையாளர்கள் படம் பிடிப்பது பற்றிக் கூட அலட்டிக் கொள்ளாமல், மிருகத்தை விடக் கேவலமாக அடித்து உதைக்கும் அளவிற்கு, அந்தப் பெண் அப்படியென்ன குற்றம் செய்துவிட்டார்?

அந்தப் பெண் மே.வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்; ''இந்தியாவிற்கான சோசலிச ஐக்கிய மையம்'' (சுசி) என்ற அமைப்பில் செயல்பட்டும் வருகிறார், அவர். அவ்வமைப்பு மைய அரசு பெட்ரோல் - டீசல் விலை உயர்த்தியதைக் கண்டித்து கடந்த ஜூன் மாதம் கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. சமூக - விரோதக் கும்பலுடன் கூடிக் குலாவும் போலீசுக்கு, பொதுமக்களின் பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டமோ, பேரணியோ, பொதுக்கூட்டமோ நடைபெறும்போது மட்டும் சட்டம் - ஒழுங்கு நினைவுக்கு வந்து விடும். அந்த ஆர்ப்பாட்டத்தில் புகுந்த போலீசு, அந்தப் பெண்ணையும் உள்ளிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரையும் மிருகத்தனமாகத் தாக்கியது.

போலீசு, பொது மக்களின் சட்டபூர்வ உரிமைகளைக் கடுகளவுக்குக்கூட ஒருபோதும் மதித்து நடந்ததில்லை. போலீசை, பொதுமக்களின் நண்பனாக, பாதுகாவலனாகக் கூறுகிறார்கள். ஆனால், சி.பி.எம். தலைமையில் உள்ள 'இடதுசாரிக் கூட்டணி' ஆளும் மே.வங்க மாநிலத்தில் கூட போலீசு பொதுமக்களின் நண்பனாக நடந்து கொள்வதில்லை. எந்தவொரு மக்களின் பிரச்சினையிலாவது, போலீசு பொதுமக்களின் பக்கம் நின்றிருக்கிறதா? எப்பொழுதுமே அது முதலாளிகளின், பண்ணை கும்பலின், ஆளும் கட்சியின் அடியாளாகத்தான் செயல்பட்டு வருகிறது. பொது மக்களை அடித்து, உதைத்து, சித்திரவதை செய்து, பீதியில் வைத்திருந்தால்தான் சட்டம் - ஒழுங்கைக் காக்க முடியும் என்பதுதான் போலீசின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இதோ இந்தப் படத்தில் போலீசை வெளுத்துக் கட்டுபவர்கள், பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள டி.எம்.சி. மருத்துவமனையின் ஊழியர்கள். பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அம்மருத்துவமனை நிர்வாகத்தை எதிர்த்து அமைதியான முறையில் போராடியவர்களோடு மோதியது போலீசு. இதனால் ஆத்திரமடைந்த ஊழியர்கள் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு போலீசை வெளுத்துக் கட்டி விட்டார்கள்.



''பொதுமக்கள் போலீசை இப்படி தாக்குவது அராஜகம், அக்கிரமம்'' என துக்ளக் ''சோ'' போன்ற போலீசின் ஊதுகுழல்கள் வேண்டுமானால் புலம்பலாம். ஆனால், இந்தப் படத்தைப் பார்க்கும் பொதுமக்களில் ஒருவரும் போலீசுக்காக அனுதாபப்பட மாட்டார்கள்.

சொல்லப் போனால், டி.எம்.சி. மருத்துவமனை ஊழியர்கள் காக்கிச் சட்டை ரவுடிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளத்தான் அக்கும்பலைத் தாக்கியிருக்கிறார்கள். பொதுமக்கள் தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வன்முறையற்ற, அமைதியான வழியில் போராட முடியாது என்ற நிலையை ஆளும் வர்க்கமும், போலீசும் என்றைக்கோ உருவாக்கிவிட்டன.

அதனால்தான் கம்யூனிசப் புரட்சியாளர்கள், ''பொதுமக்களின் நியாயமான போராட்டங்களை ஒடுக்கி வரும் போலீசு பயங்கரவாதிகளிடமிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவும், போராட்டத்தில் வெற்றி காணவும் பொதுமக்கள் ஆயுதமேந்துவது தவிர்க்க முடியாதது'' என வெகுகாலமாகவே கூறிவருகிறார்கள். டி.எம்.சி. ஊழியர்களின் போராட்டமும், அவர்கள் போலீசைத் தாக்கியதும் கம்யூனிஸ்டுகள் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என நிரூபித்து விட்டது.

போராட்டத்தில் நிராயுதபாணியாக நின்று போலீசிடம் அடிபட்டுச் சாகப் போகிறோமா? அல்லது, முதலாளிகளின், பண்ணையார்களின் சட்டபூர்வ அடியாள் படையாக இருக்கும் போலீசை, இராணுவத்தை எதிர்த்து அமைப்பு ரீதியாகத் திரண்டு ஆயுதமேந்திப் போராடப் போகிறோமா என்பதை இந்திய மக்கள் முடிவு செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது.

●●●